Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, DECEMBER 14, 2022

புதன்கிழமை, 14 டிசெம்பர் 2022 | ஒளி: 08 கதிர்: 164 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## குளிரால் 1,660 கால்நடைகள் இறந்தன

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடுமையான குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியால் 1,660 கால்நடைகளும் இறந்துள்ளதாகவும் நோயால் அல்ல என்றும் பேராதனை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் அறிக்கை வெளிப்படுத்தியுள்ளது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக கடந்த 8ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை மாடுகள்,

தொடர்ச்சி P2

டெலிகொம் மறுசீரமைப்பு

# தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல்

### சபையில் அம்பலப்படுத்தினார் சஜித்



இலாபத்தில் இயங்கும் ‘டெலிகொம்’ நிறுவனத்தை மறுசீரமைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்வது சிக்கலாகவுள்ளது என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பது நாட்டின் தேசிய பொருளாதாரத்துக்கும் தேசிய பாதுகாப்புக்கும் வலுவான அச்சுறுத்தலாக அமையும் என்று தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## QR முறையின் கீழ் மண்ணெண்ணெய்

பா.நிரோஸ்



குறைந்த வருமானங்களை பெறும் குடும்பங்கள் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை என தெரிவித்த மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் இந்திக்க அநுருத்த, குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை அடையாளம்கண்டு அவர்களுக்கு ஜனவரி முதல் மண்ணெண்ணெயை QR போன்ற முறைகளின் கீழ் வழங்க ஜனாதிபதி யோசனை முன்வைத்துள்ளார் என்றார்.

தொடர்ச்சி P2

## பயணக்காப்பீடு முக்கியமானது

### பயண ஆலோசனையை புதுப்பித்தது பிரித்தானியா

இலங்கைக்கு பயணம் செய்யும் போது, பயணக் காப்பீட்டைப் பெறுவது முன்னெப்போதையும் விட முக்கியமானது என்று பிரித்தானிய அரசாங்கம் வெளியிட்டுள்ள பயண ஆலோசனையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை செல்லும் தமது நாட்டு மக்களுக்கான புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனையை பிரித்தானியா, திங்கட்கிழமை (12) வெளியிட்டுள்ளதுடன், அதில் மேற்குறிப்பிட்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மருந்துகள், சமையல் எரிவாயு, எரிபொருள் மற்றும் உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2





## வருகை

இந்திய கடற்படைக்கு சொந்தமான ‘INS SAHYADRI’ உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தை நேற்று (13) வந்தடைந்தது. அதனை இலங்கை கடற்படையினர் வரவேற்று இந்திய கடற்படை அதிகாரிகளையும் வரவேற்றனர்.

‘INS SAHYADRI’ 143 மீற்றர் நீளமான யுத்தக் கப்பலில் 390 தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் உள்ளனர். அதன் அதிகாரியாக கப்டன் எம்.எம். தோமஸ் செயற்படுகின்றார். இதேவேளை, இந்திய கடற்படை தலைமைச் செயலாளர் சயா, ஆறுநாள் விஜயத்தை மேற்கொண்டு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, இலங்கையை நேற்று (13) வந்தடைந்தார். அதன்பின்னர், ஸ்ரீ லங்கா கடற்படைத் தளபதி அட்மிரல் ஆர். ஹறி குமாருடன் சந்திப்பில் ஈடுபட்டார்.

கொள்ளுப்பிட்டி விபத்து:

## டுபாயிலிருந்து திரும்பிய சாரதிக்கு விளக்கமறியல்

டி.கே.ஜி.கபில

கொழும்பு, கொள்ளுப்பிட்டி ஆர்.ஏ.டி. மெல் மாவத்தையில் உள்ள இரவு விடுதிக்கு சென்று திரும்பும் போது விபத்தை ஏற்படுத்தி விட்டு, டுபாய்க்கு தப்பிச் சென்ற சொகுசு காரின் சாரதியை எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு போக்குவரத்து நீதவான் நீதிமன்ற நீதவான் வை.பிரபாகரன், நேற்று (13) உத்தரவிட்டார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து, திங்கட்கிழமை (12) கைதுசெய்யப்பட்ட அவரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அன்றைய தினம் காலை 9.55 மணியளவில் டுபாய்க்கு தப்பிச் சென்றிருந்தார்.

தொடர்ச்சி P2

அம்பாறை, மன்னார் நகர சபைகள்

## மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டன

அம்பாறை, மன்னார் மாவட்டங்களில் பிரதான நகர சபைகளாகக் காணப்படும் அம்பாறை, மன்னார் நகர சபைகளை மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்காக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தற்போது காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள், அலுவலக வசதிகள் மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி, மேலதிக நிதியைச் செலவிடாமல் ஒரு சில மாவட்டங்களில் காணப்படும் நகரங்களை மாநகர சபைகளாக தரமுயர்த்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 2022.08.08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சம்பள உயர்வோ, மேலதிக கொடுப்பனவுகளோ கிடையாது

### தபால் பணியாளர்களுக்கு அமைச்சர் பதிலடி

மஹேஸ்வரி விஜயனந்தன்



சம்பளம் மற்றும் ஓய்வூதியச் சுமை அடுத்த ஆண்டு பாரியளவில் காணப்படுவதாலும், செலவுகளைத் தாங்கிக் கொள்ள முடியாத நிலையில் பொருளாதாரம் உள்ளதாலும் 2023ஆம் ஆண்டு சம்பளத்தை உயர்த்தவோ, மேலதிக நேர கொடுப்பன வுகளையோ வழங்குவதில்லை என அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தை எடுத்துள்ள நிலையில், தபால் பணியாளர்களின் கோரிக்கைகள் நியாயமற்றவை என அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தண தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

மாணவர்களின் போதைப்பொருள் பாவனை

## தேசிய நெருக்கடியாக மாறியுள்ளது

மஹேஸ்வரி விஜயனந்தன்

பாடசாலை மாணவர்கள் உட்பட எதிர்கால சந்ததியினர் மத்தியில் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருள் பரவுவது பாரிய தேசிய நெருக்கடியாக மாறியுள்ளதென தெரிவித்த வெகுஜன ஊடக அமைச்சரும் அமைச்சரவை ஊடகப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, இந்த நிலை தொடர்பில், ஒட்டுமொத்த நாடும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (13) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், ஐஸ் உள்ளிட்ட போதைப் பொருள் மிகவும் சூட்சுமமாகவும் வேகமாகவும் பல்கலைக்கழக கட்டமைப்பு, உயர்கல்வி நிறுவனங்கள், பாடசாலை சமூகம் ஆகியவற்றில் பரவுவது தொடர்பில் அமைச்சரவையில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது என்றார்.

தொடர்ச்சி P2



## மாணிக்கக்கல் சுரங்க குழிக்குள் விழுந்து இளைஞன் மரணம்

முழுச் செய்தி P5

முன்னாள் துணைவேந்தரைத் தாக்கிய

## மாணவர்களுக்கு விளக்கமறியல்

ஷேன் செனவிரத்ன

பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அதுல சேனாரத்ன மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் கீழ் பேராதனை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் 10 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் நீதிமன்ற நீதவான் ஸ்ரீநித் வீரசேகர, நேற்று (13) உத்தரவிட்டார்.

அந்த மாணவர்கள் 10 பேரும் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த பின்னர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

## ஜானகி நிபந்தனை பிணையில் விடுவிப்பு

### ஒரு வழக்கில் திலினிக்கு பிணை மறுப்பு; 16 வரை விளக்கமறியல்



‘திகோ’ குழுமத்தின் உரிமையாளரான திலினி பிரியமாலி மற்றும் ஜானகி சிறிவர்தன ஆகியோரை கடுமையான நிபந்தனை பிணையில் விடுவித்த கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, திலினிக்கு எதிரான ஒரு வழக்கில் பிணை வழங்க மறுத்ததுடன், 16ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நேற்று (13) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2

## ரூ. 25 பில்லியனை நுகர்வோர் செலுத்த வேண்டும்

பா.நிரோஸ்



இலங்கை மின்சார சபைக்கு நுகர்வோரால் செலுத்தப்பட வேண்டிய நிலுவைக் கட்டணம் 25 பில்லியன் ரூபாய் என தெரிவிக்கும் மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த, கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் இதில் 3 பில்லியன் ரூபாயை மின்சார சபை பெற்றுக்கொண்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஓமான் ஆட்கடத்தல் விவகாரம்

## ஈ.குஷான் உள்ளிட்ட 7 பேருக்கு பிணை



ஓமானுக்கு பெண்களை கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் மூன்றாவது செயலாளர் ஈ. குஷான் உள்ளிட்ட 7 ஏழு பேரையும் பிணையில் விடுவிக்குமாறு, கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க, நேற்று (13) உத்தரவிட்டார்.

நவம்பர் மாதம் 29ஆம் திகதி அதிகாலை ஓமான் தலைநகர் மஸ்கட் நகரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த போதே ஓமானுக்கான இலங்கை தூதரகத்தின் மூன்றாவது செயலாளரான ஈ.குஷான் என்றழைக்கப்படும் எதிராச்சாரிகே குஷான் கைது செய்யப்பட்டு,

தொடர்ச்சி P2



உமா ஓயா திட்டம் மூலம்

## தேசிய மின்கட்டமைப்புக்கு 120 மெகாவோட் மின்சாரம்

2023ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் உமா ஓயா திட்டத்தினூடாக மொத்தமாக 120 மெகாவோட் நீர் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்பில் இணைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

உமா ஓயா திட்டத்தில் ஈடுபட்டுள்ள நிர்மாண மற்றும் பொறியியல் நிறுவனத்தின் அதிகாரிகளுடன் அமைச்சில் சந்திப்பு இடம்பெற்றதாகதாகவும் அதன்போதே இந்த விடயம் அறிவிக்கப்பட்டதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல்



இவ்விவகாரம் குறித்து நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பாராளுமன்றத்தில் நேற்று (13) கேள்வி எழுப்பினார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், "கடந்த 2020 மற்றும் 2021 ஆகிய இரு வருடங்களில் மாத்திரம் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனம் முறையே 1,832 மில்லியன் ரூபாய் மற்றும் 657 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் அரசாங்கத்துக்கு வரி செலுத்தியுள்ளது.

குறித்த வருடங்களில் வரி செலுத்தியதன் பிற்பாடு முறையே 7,881 மில்லியன் ரூபாயையும், 12,161 மில்லியன் ரூபாயையும் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனம் இலாபமாக ஈட்டியுள்ளது.

அவ்வாறே, ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தில் இருக்கும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தகவல்களை சேமிப்பது அரச துறை பொறுப்பின் கீழ் இருக்க வேண்டிய ஒரு பகுதியாகும்.

இருந்தபோதிலும், இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட 2023 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைக்க அரசாங்கம் முன்மொழிந்திருந்தது.

இதுபோன்ற இலாபம் ஈட்டும் நிறுவனங்களை மறுசீரமைக்க அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்வது சிக்கலாகவுள்ளது.

ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனத்தை மறுசீரமைப்பது நாட்டின் தேசியபொருளாதாரத்துக்கும் தேசிய பாதுகாப்புக்கும் வலுவான அச்சுறுத்தலாக அமையும்" என்றார்.

# குளிரால் 1,660 கால்நடைகள் இறந்தன

எருமைகள் மற்றும் ஆடுகள் உள்ளடங்கலாக 1,660 கால்நடைகள் உயிரிழந்தன.

திடீர் மரணங்கள் தொடர்பில் முறையான விசாரணை நடத்தி அறிக்கையை வழங்குமாறு விவசாய, வனவிலங்கு மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்தார்.

அதன்படி, பேராதனை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம், கால்நடைகளின் மரணம் தொடர்பான விசாரணை அறிக்கையை விவசாய அமைச்சரிடம் வழங்கியுள்ளது.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை புலனாய்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பின்னர், உயிரிழந்த கால்நடைகளின் மாதிரிகள், மேலதிக பரிசோதனைகளுக்காக பேராதனை கால்நடை வைத்திய ஆராய்ச்சி நிறுவகத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த கால்நடைகள் நோயால் உயிரிழக்கவில்லை கடும் குளிரால் ஏற்பட்ட அதிர்ச்சியால் உயிரிழந்துள்ளதாகவும் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் கால்நடை புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

மண்டோஸ் புயலால் ஏற்பட்ட திடீர் குளிர் வானிலை காரணமாக, குறித்த மாகாணங்களில் வியாழன் (08) மற்றும் வெள்ளி (09) ஆகிய இரு தினங்களில் 802 மாடுகளும் 34 எருமை மாடுகளும் 256 ஆடுகளும் அடங்லாக 1,092 கால்நடைகள் உயிரிழந்தன.

மேலும், 12ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் 568 கால்நடைகள் உயிரிழந்துள்ள நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை 1,660ஆக அதிகரித்தமை குறிப்பிடத்தக்கது.

# பயணக்காப்பீடு முக்கியமானது

இதன் விளைவாக, அவசரகால அம்பியூலன்ஸ் சேவைகள், பொதுப் போக்குவரத்து வசதிகள், அவசர சேவைகள் மற்றும் வைத்தியசாலைகள் போன்ற பிற சேவைகளும் பாதிக்கப்படலாம் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளாந்தம் மின்வெட்டு அமல்படுத்தப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், பொருத்தமான பயணக் காப்பீட்டைப் பெறுவதும், அது போதுமான காப்பீட்டை வழங்குகிறதா என்பதைச் சரிபார்ப்பதும் முன்னெப்போதையும் விட முக்கியமானது என்றும் ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு பயணிக்கும் தமது குடிமக்கள் விழிப்புடன் இருப்பதுடன், பெரிய கூட்டங்களை தவிர்க்குமாறும் இந்தப் பயண ஆலோசனை மற்றும் உள்ளூர் ஊடகங்களில் வெளிவரும் செய்தி குறித்து அவதானமாக இருக்குமாறு பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

# சம்பள உயர்வோ, மேலதிக கொடுப்பனவுகளோ கிடையாது

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (13) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

தபால் திணைக்கள ஊழியர்களால் திடீரென முன்வைக்கப்பட்ட 06 கோரிக்கைகள் தொடர்பில் ஆராயும் போது, அவர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவு மாதாந்தம் 100 மணித்தியாலங்கள் என்ற நிலையில் மாதத்திற்கு 240 மணிநேரமாக இதனை அதிகரிக்க வேண்டும் என முன்வைக்கப்பட்ட கோரிக்கை நியாயமானதல்ல என்றார்.

தபால் திணைக்கள ஊழியர்கள் முன்வைத்த கோரிக்கைகள் நியாயமானவை அல்ல. 2012 ஆம் ஆண்டில், தபால் திணைக்களத்தின் சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவுகளுக்காக 7.4 பில்லியன் ரூபாயை செலுத்தியது.

ஆனால், தபால் திணைக்களத்தின் மொத்த வருமானம் ரூ. 04 பில்லியன் ஆகும். அதேபோன்று 2021ஆம் ஆண்டில் சம்பளம் மற்றும் மேலதிக நேர கொடுப்பனவுகளுக்காக 12.8 பில்லியன் ரூபாய் செலுத்தப்பட்டுள்ளதுடன் வருமானம் 7.1 பில்லியன் ரூபாயாக உள்ளது.

இது போன்ற காரணங்களால் இத்துறையை தொடர்ந்து நடத்த முடியுமா என்ற பிரச்சினை உள்ளது. இதனால் தபால் கட்டணத்தை உயர்த்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஆனால், இந்த நடவடிக்கைகள் தபால் துறையை தனியார் மயமாக்குவதற்காக அரசாங்கத்தால் எடுக்கப்படவில்லை, ஆனால், தொடர்ந்து நட்டமடைந்து வரும் ஒரு துறையாக இது காணப்படுவதோடு, தபால் துறையிலிருந்து பெறக்கூடிய சேவைக்கு பதிலாக பொதுமக்களின் மீது அதிக அழுத்தம் கொடுக்கும் முயற்சியை முறியடிக்க வேண்டும்.

எனவே, கோரிக்கைகளுக்குப் பதிலாக திணைக்களத்தின் செலவினங்களைக் குறைத்து வருமானத்தை அதிகரிப்பதற்கான எந்தவொரு யோசனையையும் விவாதிக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

# QR முறையின் கீழ்...

பாராளுமன்றத்தின் நேற்றைய (13) அமர்வில் கலந்துகொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மானால் கேட்கப்பட்ட மேலதிக வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்த உரையாற்றிய அவர், அதிக விலை கொடுத்து எரிபொருளைக் கொள்வனவு செய்து குறைந்த விலைக்கு எரிபொருளை வழங்கி வருவதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நட்டமடைந்துள்ளது. எனினும், தற்போது மண்ணெண்ணெய் தவிர்ந்த ஏனைய எரிபொருள் ஊடாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இலாபமடைந்து வருகின்றது.

மண்ணெண்ணெயில் ஒட்டோ சாரதிகளுக்கு 10 லீற்றர் எரிபொருளை வாராந்தம் வழங்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. இதன்படி தற்போது 10 லீற்றர் வழங்கப்பட்டிருந்தாலும் அதனை அவர்கள் பயன்படுத்துவதில்லை.

பஸ்களை செலுத்துவதற்கு மண்ணெண்ணெயை ஆரம்பத்தில் பயன்படுத்தினார்கள். எனினும் தற்போது அதில் கட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எனவே குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை முறையாக அடையாளங்கண்டு அவர்களுக்கு QR முறையின் கீழ் எரிபொருளை வழங்க ஜனவரி மாதம் முதல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

# மாநகர சபைகளாக தரமுயர்த்தப்பட்டன

குறித்த அங்கிகாரத்தை கருத்தில் கொண்டே அம்பாறை, மன்னார் நகர சபைகள் ஆகிய இரண்டு சபைகளிலும் எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திப் பணிகளை இலகுபடுத்துவதற்காக குறித்த நகர சபைகளை, மாநகர சபைகளாக தரமுயர்த்துவதாக பிரதமர் யோசனை சமர்ப்பித்திருந்தார்.

# மாணவர்களுக்கு விளக்கமறியல்

கைதுசெய்யப்பட்ட மாணவர்களிடம் வாக்குமூலம் பெறப்பட்டதும் அவர்களை கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போதே மேற்குறிப்பிட்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில், பேராசிரியரின் வீட்டில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெரா காணொளிகளை அடிப்படையாக வைத்து 12 மாணவர்கள் அடையாளம் காணப்பட்டு, அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், 6 மாணவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய மாணவர்களை கைதுசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

10 பேர் இதுவரை சரணடைந்த நிலையில், குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள ஏனைய மாணவர்கள் தமது உறவினர்கள் ஊடாக நீதிமன்றில் ஆஜராவதற்கான வாய்ப்பு இருப்பதாக பேராதனை பல்கலைக்கழக தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை கைதுசெய்யப்பட்டுள்ள மாணவர்களை தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பேராதனை பொலிஸ் வளாகத்துக்குள் ஊடகவியலாளர்கள் செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

# ஜானகி நிபந்தனை பிணையில் விடுவிப்பு

திலினி பிரியமாலிக்கு எதிரான ஏழு வழக்குகளில் ஒரு வழக்குக்கு 50 ஆயிரம் வீதம் 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 14 சரீரப் பிணையிலும் செல்ல நீதவான் உத்தரவிட்டார்.

மேலும், அவருக்கு எதிரான ஒரு வழக்கில் பிணை வழங்க முடியாது என்பதால் எதிர்வரும் 16ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் நீதவான் கட்டளையிட்டார்.

அத்துடன், ஜானகி சிறிவர்த்தனவுக்கு எதிரான மூன்று வழக்குகளில் ஒரு வழக்குக்கு 50 ஆயிரம் வீதம் 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான 4 சரீரப்பிணையிலும் செல்ல நீதவான் அனுமதித்தார்.

இதேவேளை, திலினி பிரியமாலியுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பொரளை சிறிசுமண தேரர் மற்றும் இசுரு பண்டார ஆகியோரை கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகே, நவம்பர் 30ஆம் திகதி பிணையில் விடுவித்தார்.

# டுபாயிலிருந்து திரும்பிய...

ஆஜர்படுத்தியபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை (10) காலை கொள்ளுபிட்டி பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 58 வயதுடைய ஒட்டோ சாரதி ஒருவர் உயிரிழந்த நிலையில், சொகுசு காரை செலுத்தி விபத்தை ஏற்படுத்திய சந்தேகநபர், அன்றைய தினம் காலை 9.55க்கு டுபாய்க்கு தப்பிச் சென்றிருந்தார்.

இந்த நிலையில், திங்கட்கிழமை இரவு (12) 9.50 மணியளவில் டுபாயிலிருந்து எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஈ.கே.648 என்ற விமானத்தில் கட்டுநாயக்க விமானநிலையத்தை வந்தடைந்த சந்தேகநபர், குடிவரவு- குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பின்னர் சந்தேகநபர், கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன், கொள்ளுப்பிட்டி பொலிஸ் குழுவொன்று கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்று, சந்தேகநபரை அழைத்துச் சென்றதாக விமானநிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளிக்கிழமை மாலை முதல் சனிக்கிழமை அதிகாலை 5 மணி வரை இரவு விடுதியில் களியாட்டத்தில் ஈடுபட்ட சந்தேகநபர், சனிக்கிழமை காலை 6.15 மணியளவில் முன்னணி ஹோட்டலிலுள்ள சொகுசு அறைக்கு மூன்று பெண்களுடன் திரும்பிக் கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

# தேசிய நெருக்கடியாக மாறியுள்ளது

எதிர்கால சந்ததியை பெருமளவில் அழிக்கும் குறுகிய கால பாரிய செயற்பாடு நடந்து வருவதாகவும், பிள்ளைகளை பெற்றோர் காப்பாற்ற முடியாத நிலையும், ஒழுக்கம் கெட்ட மாணவர்களை காப்பாற்ற முடியாத நிலையும் நாட்டில் வன்முறை ஊடாக உருவாக்கப்படுகிறது.

இந்த நாட்டின் எதிர்கால சந்ததியினரைக் காப்பாற்றுவதற்காக போதைப்பொருள் மற்றும் ஆபத்தான போதைப்பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அதன் பாவனையைத் தடுப்பதற்கு உடனடியாக செயலணியை ஸ்தாபிக்குமாறு ஜனாதிபதி நீதி அமைச்சர் மற்றும் அரச பாதுகாப்பு அமைச்சருக்கு விசேட பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் இங்கு மேலும் தெரிவித்தார்.

# ஈ.குஷான் உள்ளிட்ட 7 பேருக்கு பிணை

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

மேலும், இந்தச் சம்பவம் தொடர்பில் ஏற்கெனவே கைது செய்யப்பட்ட ஆஷா திஸாநாயக்க உள்ளிட்ட அனைத்து சந்தேகநபர்களும் மன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களுக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்த நீதவான், ஒவ்வொரு மாதமும் கடைசி ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 12 மணிக்குள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு உத்தரவிட்டார்.

இலங்கை பெண்களை சுற்றுலா விசாவில் ஓமானுக்கு வேலைக்கு அனுப்பி வைத்து அவர்கள் அங்கு துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன.

**“ இலங்கை பெண்களை சுற்றுலா விசாவில் ஓமானுக்கு வேலைக்கு அனுப்பி, அங்கு துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன**

இதனையடுத்து, ஆட்கடத்தல் கும்பல் குறித்த தகவல்கள் வெளியானதுடன், அதனுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் பலர் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய மின்கட்டமைப்புக்கு 120 மெகாவோட் மின்சாரம்

உமா ஓயா திட்டத்தின் நிர்மானப் பணிகள் எதிர்வரும் 2023 ஏப்ரல் மாத இறுதிக்குள் முடிக்கப்படும் என்று நிறுவன அதிகாரிகள் அமைச்சருக்கு அறிவித்துள்ளனர்.

அத்துடன், 2023 ஆம் ஆண்டு ஜூன் மாதத்துக்குள் தேசிய மின்கட்டமைப்புடன் 120 மெகாவோட் நீர் மின்சாரம் இணைக்கப்படும் என்று இந்தச் சந்திப்பின் போது அதிகாரிகள் உறுதியளித்ததாக அமைச்சர் காஞ்சன மேலும் தெரிவித்தார்.

# ரூ. 25 பில்லியனை நுகர்வோர் செலுத்த வேண்டும்

இலங்கை மின்சார சபைக்கு இன்றளவு 25 பில்லியன் ரூபாய் நிலுவைக் கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. இக்கட்டணத்தை அறிவிடுவதற்காக கட்டணங்களை செலுத்தாதவர்கள், நிறுவனங்களுக்கு கடிதம், எஸ்.எம்.எஸ் ஊடாக அறிவித்தல்களை இலங்கை மின்சார சபை வழங்கியுள்ளது. எனவே, எதிர்காலத்தில் இந்த நிலுவைக் கட்டணத்தைப் பெற்றுக்கொள்ள மின்துண்டிப்புகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 3 பில்லியன் நிலுவைக் கட்டணத்தை இலங்கை மின்சார சபை பெற்றுக்கொண்டுள்ளது எனவும் தெரிவித்தார்.

அரச இல்லங்களைப் பயன்படுத்தியவர்கள், எம்.பிக்கள், அமைச்சர்கள் பலர் அதிகளவான தொகை நிலுவைக் கட்டணமாக செலுத்த வேண்டியுள்ளது. அவர்களின் பெயர் விவரங்களை வெளியிட நாம் தயார். ஆனால் அவர்களில் பலர் தற்போது உயிரோடு இல்லை.

அவர்கள் பயன்படுத்திய அரச இல்லங்களை ஒப்படைக்கும்போது மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படும். அந்தக் கால அவகாசத்துக்குள் பயன்படுத்தும் மின்சாரக் கட்டணங்களை அவர்கள் செலுத்துவதில்லை எனவும் தெரிவித்தார்.

**“ இக்கட்டணத்தை அறிவிடுவதற்காக கட்டணங்களை செலுத்தாதவர்களுக்கு கடிதம், எஸ்.எம்.எஸ் ஊடாக அறிவித்தல்களை மின்சார சபை வழங்கியுள்ளது**

அமைச்சர்கள் இரு வாரங்களுக்குள் கட்டணத்தை செலுத்த வேண்டுமென்கிற புதிய நடைமுறைப் பின்பற்றப்பட்டு வருகிறது. அதன்படி 75 சதவீதமான நிலுவைக் கட்டணம் பெறப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

பேராதனை பல்கலைக்கழக மோதல்

# ஆளும், எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கண்டனம்

பேராதனை பலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சிகள் கூட்டாகக் கண்டித்துள்ளதோடு, இச்சம்பவம் தொடர்பான சுயாதீன விசாரணைகள் மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தின.

சபாநாயகர் தலைமையிலான நேற்றைய (13) பாராளுமன்ற அமர்வில் இந்த விடயம் தொடர்பில் ஆரம்பத்திலேயே ஆளும், எதிர்க்கட்சி எம்.பிகள் தங்களது எதிர்ப்புகள், கண்டனங்களை பாராளுமன்றத்தில் பதிவு செய்தனர்.

### மாணவர் – பேராசிரியர் மோதல் உருவாகியுள்ளது

மாணவர்களுக்கும் பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கும் பேராதனை பல்கலைக்கழகத்தில் 50 வருடங்களுக்கு மேலாகக் காணப்பட்ட ஒற்றுமையில் விரிசல் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

நாட்டின் கல்வி, பல்கலைக்கழகங்கள் மோசமான நிலையில் பயணிக்கின்றன. எனவே இது தொடர்பில் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்களுக்கு இடையே பிரச்சினைகள் ஏற்பட்டு வந்த நிலையில் தற்போது மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் இடையே பிரச்சினைகள் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது எனவும் சரித ஹேரத் எம்.பி தெரிவித்தார்.

### வன்மையாகக் கண்டிக்கிறோம்

இச்சம்பவத்தை வன்மையாகக் கண்டிப்பதாகவும், இது தொடர்பில் சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மாணவர்கள் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள, பல்கலைக்கழகங்களுக்குள் அமைதியான சூழல் உருவாக்கப்பட வேண்டும். கேம்பிரிட்ஜ், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகங்களுக்கு இணையாகவே பேராதனை பல்கலைக்கழகமும் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அந்த நோக்கம் நிறைவேறவில்லை. எதிர்காலத்திலாவது அந்த நோக்கத்தை நிறைவேற்ற அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவோம்.

துணைவேந்தர்களை மாணவர்கள் தாக்கும் சம்பவங்கள் இலங்கையில் மாத்திரமே நடக்கிறது. உலகில் வேறெங்கும் இதுபோன்ற சம்பவங்கள் நடப்பதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறும்போதெல்லாம் பேசிக்கொண்டு மாத்திரமே இருக்கிறோம். எனவே இந்த விடயத்தில் சிந்தித்து செயற்படவில்லை என்றால் நாடு பேரழிவை சந்திக்கும் எனவும் எச்சரித்தார்.

### கடுமையான தலையீடுகள் வேண்டும்

இதுபோன்ற தாக்குல் சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன. எனவே இந்த விடயத்தில் கடுமையான தலையீடுகளை மேற்கொள்ள வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் சமன் பிரிய ஹேரத் தெரிவித்தார்.

# குடுக்காரர்களை பாதுகாத்தது கிடையாது



குற்றவாளிகளை ஒருபோதும் பாதுகாத்தது கிடையாதென தெரிவிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், குற்றவாளிகளை பாதுகாப்பவனாக இருந்திருந்தால் இப்போது பாராளுமன்றத்தில் இருந்திருக்க மாட்டேன் எனவும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (13) அமர்வில் கலந்துகொண்டு பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகேவின் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவு-செலவு திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு டயானா கமகே தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு குடிவரவு குடியகல்வு திணைக்களம் அனுப்பி வைத்திருந்த கடிதம் தொடர்பில் நான் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தேன். அதாவது வெளிநாட்டு குடியுரிமையைக் கொண்ட நபர் ஒருவர் பாராளுமன்றத்தில் இருக்கிறார் என நான் கூறியிருந்தேன்.

இது தொடர்பில் உரையாற்றியிருந்த டயானா கமகே, நான் குடுக்காரர்களைப் பாதுகாப்பதாகவும் உயிரிழந்த எனது பெற்றோர்களையும் அவமதிக்கும் வகையிலும் சபையில் உரையாற்றியிருந்தார். எனது அரசியல் பயணத்தில் மக்களின் நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இவ்வாறான நிலையில் எனக்கு தெரிந்த ஒரு விடயத்தையே நான் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன்.

என்மீது அடிப்படையற்ற, போலியான குற்றச்சாட்டுகளை முன்வைத்து பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்த டயானா கமகேவின் பாராளுமன்ற உரையை ஹன்சாட்டிலிருந்து நீக்க வேண்டும் எனவும் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

மேலும் எனது அரசியல் வாழ்க்கையில் எந்தவொரு குற்றவாளிகளையும் பாதுகாத்தது கிடையாது. அரசாங்கத்தை கடுமையாக விமர்சிக்கும் எம்.பி என்ற வகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்ததும் எனது தொலைபேசி அழைப்புகள் புலனாய்வுப் பிரிவினரால் ஒட்டுக்கேட்கப்பட்டன. எனவே குற்றவாளிகளை நான் பாதுகாப்பதாக இருந்தால் நான் இப்போது பாராளுமன்றத்தில் இருந்திருக்க மாட்டேன் என்றார்.

பேராதனை பல்கலைக்கழக தாக்குதல் சம்பவம்

# சுயாதீன விசாரணையை மேற்கொள்ள பணிப்பு



பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசேட அறிக்கையை ஜனாதிபதி கோரியுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன சபைக்கு அறிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (13) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் சுயாதீனமான விசாரணைகளை மேற்கொண்டு தனக்கு விசேட அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டுமென அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். பல்கலைக்கழகங்களுக்குள் கல்விச் சுதந்திரம் காணப்பட வேண்டும் என்பதை முன்னாள் உயர்க்கல்வி அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஏற்றுக்கொள்வார்கள் என நம்புகிறேன்.

மாணவர்கள் அச்சம், சந்தேகமின்றி பல்கலைக்கழகச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான சூழல் இருக்க வேண்டும். இல்லை என்றால் மாணவர்களை, பெற்றோர் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பமாட்டார்கள். அதுபோ,ல பேராசிரியர்களால் சிறப்பாகக் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் முடியாது.

நாட்டின் பொதுச் சட்டம், பல்கலைக்கழகங்களுக்குள்ளும் பிரயோகிக்கப்படும் பொதுச் சட்டமாக மாற வேண்டும். துன்புறுத்தல்கள், வன்முறையை புறக்கணித்து மனித உரிமைகள், கல்விச் சுதந்திரத்தைக் பாதுகாக்கும் சூழலைப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்த அனைத்துக் கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும்.

அதுபோல பல்கலைக்கழகங்கள், பாடசாலைகளுக்குள் போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியை அமைக்கவும் அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

மே.9 வன்முறைச் சம்பவங்கள்

# பின்னணியில் இருந்தவர்களை தெரிய அறிக்கை வேண்டும்



மே-09 வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் முஸ்ஸமில் தெரிவித்தார்.

இச்சம்பவத்தால் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் உயிர் பறிப்போயுள்ளது. பல எம்.பிகள் தங்களது வீடுகளை இழந்துள்ளனர். எனவே, இச்சம்பவங்களுக்குப் பின்னால் இருந்தவர்கள் தொடர்பான தகவல்களை நாட்டுக்கும், சமூகத்துக்கும் வெளிப்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார்.

தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக பொதுமக்கள் கூட தகவல்களை அறிந்துகொள்ளும் நிலைமை ஏற்பட்டுள்ளபோதிலும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சில தகவல்களை தெரிந்துகொள்ள முடியாதுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவும் இந்த அறிக்கையை பாராளுமன்றத்தில் ஜனாதிபதி சமர்ப்பிக்க வேண்டுமென வலியுறுத்தினார்.

பேராதனை தாக்குதல் சம்பவம்

# ஜே.வி.பிக்கு தொடர்புள்ளது என்கிறது மொட்டுக் கட்சி



மக்கள் விடுதலை முன்னணி, சோசலிஷ முன்னணியினரே பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன தாக்குதல் சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (13) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கவும் இதே குற்றச்சாட்டை முன்வைத்து உரையாற்றியிருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் அதுல சேனாரத்ன பல்கலைக்கழக மாணவர்கள் மோசமானமுறையில் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டுள்ள துரதிர்ஷ்டவசமான சம்பவம் இடம்பெற்றுள்ளது. இலங்கையில் மாத்திரமல்ல ஆசியாவிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட பேராசிரியராகவும் இருக்கிறார். இவ்வாறான நிலையில் இவர் மீது மேற்கொள்ளப்பட்ட மோசமான தாக்குதல் தொடர்பில் பாராளுமன்றம் அதிகூடிய கவனத்தை செலுத்த வேண்டும்.

இதற்கு முன்னரும் பேராசிரியர்கள் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர். குறிப்பாக 1987ஆம் ஆண்டு ஸ்டேன்லி திலகரத்ன உள்ளிட்ட பேராசிரியர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். இதனால், நாட்டில் 87 ஆயிரம் பேர் கொலை செய்யப்படும் நிலைமை ஏற்பட்டிருந்தது.

இதுபோலவே தற்போது பேராதனை பல்கலைக்கழக தாக்குதல் சம்பவத்துடன் ஜே.வி.பிக்கும் சோசலிஷ முன்னணியருக்கும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்களுக்கும் தொடர்புள்ளது என இது தொடர்பில் முறையான விசாரணைகளை மேற்கொண்டு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றார்.

# ஈஸ்டர் விவகாரத்தில் மைத்திரி விடுபட முடியாது



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டுகளில் இருந்து முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுபட முடியாது என்கிற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருப்பதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்கான வினாக்களுக்குப் பதிலளிப்பதற்காக பாராளுமன்றம் நேற்று (13) கூடியிருந்தது. இதன்போது 2015 – 2019ஆம் ஆண்டுவரையில் கூடிய பாதுகாப்பு சபைக் கூட்டம் தொடர்பான கேள்விகளை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் பாதுகாப்பு அமைச்சிடம் முன்வைத்திருந்தார்.

இதற்கு பதிலளித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க இரு வார காலஅவகாசம் வேண்டும் என்றார்.

எனினும் இதற்கு எதிர்ப்பை தெரிவித்த துஷார இந்துனில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டுகளை ரணில் விக்கிரமசிங்க மீதும் மைத்திரிபால சிறிசேன மீதும் தற்போதைய ஆளுங்கட்சிக் கடந்த காலங்களில் முன்வைத்திருந்தது. இவ்வாறான நிலையில், இக்கேள்விகளுக்குப் பதிலளிக்க இரு வாரங்கள் எடுத்துக் கொள்வதில் நான் திருப்தியடையவில்லை என்றார்.

# போதைப்பொருளை வழங்கி மாணவர்களை மாற்றி வைத்துள்ளது



பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருளை வழங்கிய அரசியல் கட்சிகள் சில, அவர்களை மாற்றி வைத்துள்ளதாகத் தெரிவிக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அரச பல்கலைக்கழக மாணவர்களை தனியார் துறையினர் தொழில்களுக்கு எடுப்பதில்லை என்றார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (13) அமர்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் தாக்கப்பட்ட சம்பவத்தை அனைத்துக் கட்சிகளும் கடுமையாகக் கண்டிக்கின்றன. இது தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் வேண்டும். ஆனால், பாராளுமன்றத்தில் உள்ள சிலர், பல்கலைக்கழகத்தில் உள்ள மாணவர்களை கைது செய்யக்கூடாது; அது மனித உரிமை மீறல் என பேசுகிறார்கள்.

மே 09ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் நான் பாராளுமன்றத்தில் உரையாற்றியிருந்தேன். இதன் பின்னர் என்னை சமூகவலைத்தளங்களில் கடுமையாக திட்டித்தீர்த்தார்கள். மாணவர்கள் மத்தியில் வன்முறையை தூண்டும் பேராசிரியர்கள் நாட்டில் இருக்கிறார்கள். அரசியல் பின்புலம் கொண்ட குழு ஒன்று நாட்டில் வன்முறை, பயங்கரவாதச் செயற்பாடுகளை உருவாக்க செயற்பட்டு வந்தார்கள். இதனை இல்லை என்று கூற முடியாது. இதற்குப் பேராசிரியர்கள் உடந்தையாக இருக்கிறார்கள். வீடுகளைக் கொளுத்துவதற்குப் பல பேராசிரியர்கள் சென்றிருந்தனர்.

எனவே, இந்தக் கொள்கைகளுக்கு இணங்காத பேராசிரியர்களுக்கு சிக்கல் ஏற்படும் நிலைமை வந்துள்ளது. பல்கலைக்கழகங்களில் உள்ள பகடிவதைகள் காரணமாக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்கள் செல்வதற்கு தயங்குகிறார்கள். அதுபோல தனியார்துறையினர் அரச பல்கலைக்கழக மாணவர்களை தொழில்களில் இணைத்துக் கொள்வதில்லை.

தனியார் துறையில் உள்ள வேலை வாய்ப்புகள் 90 சதவீதமான தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கே வழங்கப்படுகின்றன. சில அரசியல் கட்சிகள் ஐஸ் உள்ளிட்ட போதைப்பொருட்களை வழங்கி மாணவர்களை மாற்றி வைத்திருக்கிறார்கள். சில பேராசிரியர்கள் கூட “தாக்குங்கள், கொலை செய்யுங்கள்” என்றே பேசுகிறார்கள். இது தொடர்ந்தால் பல்கலைக்கழகக் கட்டமைப்பு முழுமையாக வீழும் எனவும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலுள்ள

# கலாசார மத்திய நிலையங்களை சுவீகரிக்க தீவிர முயற்சி

■ செந்துரன் பிரதீபன்

யாழ். மாவட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கலாசார மத்திய நிலையங்களை கையகப்படுத்துவதற்கு தொல்லியல் திணைக்களம் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இதற்கான கலந்துரையாடல்கள் பிரதேச செயலகங்களில் இடம்பெற்று வருகின்றன. இன்று புதன்கிழமை வலி.மேற்கு பிரதேச செயலகத்தில் இதற்கான கூட்டம் இடம்பெறவுள்ளது எனத் தெரியவருகின்றது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யுத்தத்துக்குப் பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவில் இந்தக் கலாசார மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டன. பிரதேச செயலகங்களுக்கு கீழ் இவை இணைக்கப்பட்டுள்ளன. குறித்த நிலையங்களை அமைக்கும்போது, தொல்லியல் திணைக்களமே நிதி ஒதுக்கீடு செய்தது எனக் கூறப்படுகின்றது. அதைக் காரணம் காட்டி, அந்த நிலையங்களை சுவீகரிப்பதற்கு தொல்லியல் திணைக்களம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சங்கானையில் உள்ள கலாசார மத்திய நிலையத்தை தொல்லியல் திணைக்களம் சுவீகரிக்க தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. ஏற்கெனவே, இதற்கான கூட்டம் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிலையில், இன்று மற்றொரு கூட்டம் நடைபெறவுள்ளது.

குறித்த கலாசார மத்திய நிலையம் வலி.மேற்கு பிரதேச சபையின் காணிக்குள் அமைக்கப்பட்டிருக்கின்றது. காணிக்கான உரித்து பிரதேச சபையிடம் இருக்கின்ற நிலையில், பிரதேச சபையிடம் கட்டட அனுமதி பெறப்படாமல் கடந்த காலத்தில் அமைக்கப்பட்ட இந்த நிலையத்தை, தொல்லியல் திணைக்களத்திடம் கையளிக்க முடியாது என சபையின் தவிசாளரும் உறுப்பினர்களும் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

## மண்டபம் முகாமிலிருந்து தப்பிய இருவர் வேலணையில் கைது

■ எம். றொசாந்த்

தமிழகம் மண்டபம் முகாமில் இருந்து தப்பி வந்த இருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது: சில மாதங்களுக்கு முன்னர் இருவரும் சட்டவிரோதமாக கடல் வழியாக தமிழகம் சென்றபோது, அவர்களை தமிழக கடலோர பாதுகாப்பு பிரிவினர் விசாரணை செய்து, மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், மண்டபம் முகாமில் இருந்து தப்பியோடிய இருவரும், தமிழகத்தில் இருந்து படகொன்றில் சட்டவிரோதமாக இலங்கை வந்தபோது வேலணை கடற்பரப்பில் வைத்து, கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.






## கொழும்பு மாநகர சபையால் ஏழு வாகனங்கள் கையளிப்பு

■ நிதர்சன் வினோத்

கொழும்பு மாநகர சபையினுடைய ஏழு வாகனங்கள் திருத்தப்பட்டு, மீள்பாவனைக்குரிய வகையில் வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையே நட்புறவை ஏற்படுத்தும் வகையில், மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர், பிரதேச சபை உறுப்பினர்கள் தென்பகுதிக்கு பயணத்தை மேற்கொண்டிருந்தனர். இதன்போது, வெள்ளிக்கிழமை (09) கொழும்பு மாநகர சபை மேயர் ரோஸி சேனநாயக்க, மேற்குறிப்பிட்ட வாகனங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் ஜெபநேசனிடம் கையளித்தார்.



காரைநகரில் கடற்படை முகாம்

## காணி சுவீகரிப்புக்கு எதிர்ப்பு

■ நிதர்சன் வினோத்

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட நீலங்காடு பகுதியில் உள்ள தனியாருக்கு சொந்தமான 40 ஏக்கர் காணியை, இலங்கை எழாறா கடற்படை முகாமுக்கு அளவிடுவதற்கு மக்கள் பாரிய எதிர்ப்பை வெளியிட்டனர்.

குறித்த காணியை அளவிடுவதற்கு, நில அளவைத் திணைக்களத்தினர் நேற்று (13) வருகை தந்தபோது, பொதுமக்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரும் ஒன்றுகூடி எதிர்ப்பை வெளியிட்டனர்.

அங்கு வந்த நில அளவைத் திணைக்களத்தினர், 'மக்களுக்கு சொந்தமான காணியை, கடற்படையினருக்கு அளவிடுவதற்கு அனுமதிக்க மாட்டோம்' என்று எழுதி, ஒப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஆவணத்தை பெற்றுக்கொண்டு அங்கிருந்து சென்றனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச சபை

## சிற்றூழியர் மீது வாள்வெட்டு

### கண்டித்து கவனயீர்ப்பு போராட்டம்

■ செ. கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் சிற்றூழியர் நேற்று முன்தினம் (12) முறுகண்டி பகுதியில் கழிவகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்ட வேளை, இனம் தெரியாத நபர்களால் வாள்வெட்டு தாக்குதல் நடத்தியமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் சரியான நீதி கிடைக்க கோரியும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களும், கவனயீர்ப்பு போராட்டத்தை புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாக மேற்கொண்டுள்ளார்கள்.




வாள்வெட்டு தாக்குதலக்கு உள்ளாகிய 31 அகவையுடைய சிற்றூழியர், மாங்குளம் ஆதார மருத்துவமனையிலிருந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

'ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்து', 'அரச ஊழியர்களுக்கு நாட்டில் பாதுகாப்பு இல்லையா', 'சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்து', 'குற்றவாளிகளுக்கு சார்பாக சட்டத்தரணிகள் யாரும் முன்வரவேண்டாம்', 'குற்றவாளிகளை கைதுசெய்' போன்ற கோரிக்கைகள் தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட

## ட்ரக்டர்கள் தடுத்து வைப்பு

■ செந்துரன் பிரதீபன்

வயாவிளான், குட்டியப்புலம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூன்று ட்ரக்டர்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.



மூன்று வயது குழந்தை

## தந்தையால் பாலியல் துஷ்பிரயோகம்

■ செந்துரன் பிரதீபன்

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிராமம் ஒன்றில், தனது மூன்று வயது பெண் பிள்ளையை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய 38 வயதுடைய தந்தையை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்மறியல் வைக்க பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் பொண்ணுத்துரை கிரிசாந்தன் நேற்று முன்தினம் (12) உத்தரவிட்டார்.

மனைவி இல்லாத நேரம், குறித்த நபர் தனது மூன்று வயது மகளின் பெண்ணுறுப்புக்குள் கையை வைத்து, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார். குழந்தையின் பெண்ணுறுப்பில் காயம் ஏற்பட்டதை அவதானித்த தாயார், இது தொடர்பில் பருத்துத்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தார். இதன் அடிப்படையில், சந்தேக நபர் கைது செய்யப்பட்டிருந்தார்.

திருகோணேஸ்வர ஆலய வளாகத்தை

# புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தி கடைகளை அகற்றவும்

### மூதூர் பிரதேச சபையில் பிரேரணை நிறைவேற்றம்

■ எப். முபாரக்

திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்தக் கோரியும், ஆலய வளாகத்துக்குள் அத்துமீறி அமைக்கப்பட்டுள்ள கடைகளை அகற்றக் கோரியும், மூதூர் பிரதேச சபையில் பிரேரணை நேற்று (13) ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மூதூர் பிரதேச சபையின் அமர்வு நேற்று காலை இடம்பெற்றபோது, உப தவிசாளர் சி. துரைநாயகம் தனிநபர் பிரேரணையை முன்வைத்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது: பல ஆயிரம் ஆண்டுகள் பழைமையான வரலாற்றையும், இந்து சமயத்தின் அடையாளச் சின்னங்களையும் கொண்டுள்ள திருகோணேஸ்வர ஆலயத்தையும் அதனைச் சூழவுள்ள இயற்கை வளங்களையும், அதன் பாரம்பரியத்தோடும் எழிலோடும், இயல்பாகவே பாதுகாக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

எனினும், திருகோணேஸ்வர ஆலய வளாகத்துக்குள் சட்டத்துக்கு முரணாக, அத்துமீறிய கடைகளும் கட்டுமானங்களும் மனித நடமாட்டங்களும் ஆலயத்தின் புனிதத்தை பாதிக்கும் விதமாகவும், ஆலய வளாகத்தைச் சூழவுள்ள இயற்கை வளங்களுக்கும், வன விலங்குகளுக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் இருந்து வருகின்றன. இதே நிலைமை தொடருமானால் ஆலயத்தின் புனிதத்தன்மை பாதிக்கப்படுவதோடு மட்டுமல்லாது, திருகோணேஸ்வரத்திற்கு உரித்தான



இயற்கை வளங்களையும் வனவிலங்குகளையும் இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே, திருகோணேஸ்வர ஆலய வளாகத்தை புனித பிரதேசமாக பிரகடனப்படுத்துவதோடு ஆலய வளாகத்தில் அத்துமீறி, சட்டத்துக்கு முரணான வகையில் அமைக்கப்பட்டுள்ள கடைகள், கட்டடங்கள் என்பவற்றை உடனடியாக அகற்றி, ஆலயத்தின் எல்லைக்கு அப்பால் சட்ட ரீதியாகவும், நியாயமான முறையிலும் அவற்றுக்கான பதில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் எனவும் இச் சபையின் ஊடாக தொல்லியல் திணைக்களம் உட்பட அதனுடன் தொடர்புடைய ஏனைய திணைக்களங்களையும் அரசாங்கத்தையும் கேட்டுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.



## இன்று ஆறுமுக நாவலர் குருபூஜை

### புத்தகங்கள் அமோக விற்பனை

■ வி.ரி சகாதேவராஜா

ஆறுமுக நாவலர் பெருமானின் குருபூஜை இன்று (14) ஆகும். இதனை முன்னிட்டு, பெரியநீலாவணை விஷ்ணு ஆலயத்தில் அந்தர் யாகம்' இன்று நடத்தப்படவுள்ளது.

இதேவேளை, ஆறுமுக நாவலர் பெருமான் ஆண்டை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்த புத்தக கண்காட்சியும் விற்பனையும், காரைதீவு விபுலானந்த மணி மண்டபத்தில் நடைபெற்று வருகிறது. பாடசாலை மாணவர்கள் சகிதம் புத்தக விற்பனை அமோகமாக நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இன்று மாலை 5 மணி வரை புத்தக விற்பனையும் கண்காட்சியும் நடைபெறும்.



## 'மட்டு. முயற்சியாண்மை - 2022'

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில், 'மட்டு. முயற்சியாண்மை –2022' உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான பிரதேச மட்ட விற்பனைக் கண்காட்சி நேற்று முன்தினம் (12) பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக நடைபெற்றது.
இங்கு, 30 இற்கும் அதிகமான உள்ளூர் உற்பத்தி பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்ததோடு, கலந்து கொண்டோர் பெருமளவான உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் செலுத்தியிருந்தனர். மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால், சிறுதொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு செயற்றிட்டங்கள் முக்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம் நூர்தீன்

## போதைப்பொருளை விரட்டும் விழிப்புணர்வு

■ ஹஸ்பர்

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தி/கி/முள்ளிப்பொத்தானை மத்திய கல்லூரி பாடசாலையின் உயர்தர மாணவர்களுக்கான போதைப்பொருள் பாவனை தடுப்பு தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் (12) நடைபெற்றது.

தம்பலகமம் பிரதேச செயலாளர் ஜெ. ஸ்ரீபதியின்



வழிகாட்டுதலுக்கிணங்க இடம் பெற்ற இந்நிகழ்வின் வளவாளராக சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் ஹம்சபாலன் கலந்து கொண்டார். இதன் போது, மாணவர்களுக்கான சத்திய பிரமாணமும் செய்து கொள்ளப்பட்டது.

போசாக்கு குறைபாடுள்ள குழந்தைகளுக்கு

## 'இலங்கை காப்போம்' தொண்டு நிறுவனம் உதவி

■ அபு அலா

எமது நாட்டில் போசாக்கு குறைபாடுள்ள 40,000 குழந்தைகளின் போசாக்கு தேவையை, பெற்றோர்களால் பூர்த்தி செய்ய முடியாத நிலைமை காணப்படுவதாக 'இலங்கை காப்போம், தொண்டு நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு. பிரதீப்கரன் தெரிவித்தார்.

'இலங்கை காப்போம்' தொண்டு நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை, இலுப்பங்குளம் கிராமத்திலுள்ள 100 சிறுவர்களுக்கு போசாக்குணவு வழங்கி வைக்கும் நிகழ்வு, திங்கட்கிழமை (12) இலுப்பங்குள கிராம சேவகர் அலுவலகத்தில், அதன் ஒருங்கிணைப்பாளர் வி.ஆர் விஜித்ரா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கு. பிரதீப்கரன் மேலும் தெரிவித்ததாவது; சிறுவர்கள் போசாக்கு குறைபாட்டு நிலைமைக்க முகம்கொடுப்பதை இல்லாதொழிக்க தொண்டு நிறுவனங்கள் பல முன்னின்று செயற்படுகின்றன. வெளிநாட்டில் இருக்கின்ற எமது நாட்டவர்கள், எங்களைப் போன்ற தொண்டு நிறுவனங்கள் ஊடாக, பாடசாலை மாணவர்களுக்கும் சிறுவர்களுக்கும் போசாக்கான உணவு வகைகளை வழங்கி வருகின்ற அதேவேளை கற்றல் உபகரணங்களையும் வழங்க பல உதவிகளைச் செய்து வருகின்றனர் என்றார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய

## வர்த்தகர்களுக்கு அபராதம்

■ எம்.எஸ்.எம் ஹனீபா

அம்பாறை மாவட்டத்தில் நவம்பர் மாதம், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த 91 வர்த்தகர்களுக்கு நீதிமன்றங்களால் 04 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ றிஸ்லி நேற்று (13) தெரிவித்தார்.

கட்டுப்பாட்டு விலையை மீறி கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக நுகர்வோர்கள் செய்த முறைப்பாட்டையடுத்து, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என். எம் சாலிய பண்டார தலைமையில் சுற்றி வளைப்புகளை, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் மேற்கொண்டிருந்தனர்.



வர்த்தக நிலையங்களில் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தாமை, நுகர்வுக்குப் பொருத்தமில்லாத பொருட்களை காட்சிப்படுத்தியமை, காலவதியான பொருட்கள் மற்றும் தரமற்ற பொருட்களை விற்பனை செய்து நுகர்வோரை ஏமாற்றுதல், மின் உபகரணங்களுக்கான கட்டுறுதிக் காலத்தை வழங்காமை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

## கண்டி, மாத்தளை, நுவரெலியாவில்


# 5 ஆயிரம் வீடுகள் ஆபத்தில்

பா.நிரோஸ்

மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் அதிக அபாயத்தைக் கொண்டுள்ள வீடுகளின் எண்ணிக்கை 5 ஆயிரத்தைத் தாண்டுவதாகவும், இவர்களைப் பாதுகாப்பான வேறு இடங்களில் குடியமர்த்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அரசாங்கம் சபைக்கு அறிவித்தது.

பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்கவின் நேற்றைய (13) வாய்மூல விடைக்கான வினாவுக்குப் பதிலளித்து உரையாற்றிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், அதிக அபாயத்தைக் கொண்ட வீடுகள் மாத்தளையில் 1,279 ஆகவும், 2,089 வீடுகள் நுவரெலியாவிலும், கண்டியில் 2,001 வீடுகளும் காணப்படுகின்றன என்றார்.

மேற்படி வீடுகளில் வாழ்வோரை வேறு இடங்களில் குடியமர்த்துவதற்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்காக அதிக ஆபத்தான பகுதிகளில் உள்ள வீடுகளை பாதுகாப்பான இடங்களுக்கு குடியமர்த்த வேண்டுமென தேசிய கட்ட ஆராய்ச்சி நிறுவகத்தால் அடையாளம் காணப்பட்டுள்ள குடும்பங்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான வேலைத்திட்டங்கள் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றார்.



பதுளை, நுவரெலியா, காலி, மொனராகலை, கண்டி, களுத்துறை, ஹம்பாந்தோட்டை உள்ளிட்ட மாவட்டங்களில் பிரதேச செயலாளர்களின் கண்காணிப்பின் கீழ் இந்த வேலைதிட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியானது தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள கட்டட நிர்மாணப் பொருள்களுக்கு அமைய போதுமானதல்ல எனவும் தெரிவித்தார்.

## ஆசிரியர் மீது அரசியல்கட்சி உறுப்பினர்கள் தாக்குதல்

### அறிக்கையை கோருகிறார் கல்வி இராஜாங்க அமைச்சர்

எம். செல்வராஜா

பூனாகல பகுதியிலுள்ள ஆசிரியரொருவர் பாடசாலைக்குள் வைத்து வெளியாட்களால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான அறிக்கையை ஒரு வாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறு கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் கோரியுள்ளார்.

மாகாண கல்வி அமைச்சின் செயலாளருக்கு இது தொடர்பில் அவசர கடிதமொன்றை அனுப்பி, இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ஹல்தும்முல்ல பிரதேச சபையின் தவிசாளரால் தாக்கப்பட்ட குறித்த ஆசிரியர், தியத்தலாவை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள் தற்போது பணிப்பகிஷ்கரிப்பையும் முன்னெடுத்து வருகின்றனர்.

எனவே, மேற்படி சம்பவம் தொடர்பாக ஒரு வாரத்துக்குள்



முழுமையான அறிக்கையை தனது கவனத்துக்கு கொண்டு வருமாறு அக்கடிதத்தின் ஊடாக கோரியுள்ளார்.

இக்கடிதத்தின் பிரதிகள் ஜனாதிபதி, பிரதமர், கல்வி அமைச்சர், ஊவா மாகாண ஆளுநர், கல்வி அமைச்சின் செயலாளர், ஊவா மாகாண கல்விப்பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அபிவிருத்திச்சங்க செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## காசல்ரீ நீர்த்தேக்கத்தில் பெண்ணின் சடலம் மீட்பு

ரஞ்சித் ராஜபக்‌ஷ, எம். கிருஸ்ணா

காணாமல் போயிருந்த பெண்ணொருவர், காசல்ரீ நீர்த்தேக்க பகுதியிலிருந்து நேற்று (13) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் டிக்கோயா, காபெக்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த 75 வயதுடைய ஆறுமுகம் கமலம் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.
நீர்த்தேக்கத்திலிருந்து 300 மீற்றர் தொலைவிலேயே பெண்ணின் வீடு காணப்படுவதாகவும், திங்கட்கிழமை (12) இரவிலிருந்து இப்பெண்



காணாமல் போயிருந்ததாகவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

காணாமல்போன பெண்ணை, உறவினர்கள் தேடியபோது, காசல்ரீ நீர்த்தேக்கத்துக்கு அருகிலுள்ள சனசமூக கட்டடத் தொகுதிக்கு அருகிலிருந்து காலை 7.30 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹட்டன் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வெற்றிடங்கள்

சுமணசிறி குணதிலக்க

மொனராகலை மாவட்டத்தில் உள்ள மரண விசாரணை பிரிவுகள் பலவற்றில் மரண விசாரணை அதிகாரிகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதாக மொனராகலை மாவட்ட செயலகத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த நிலை காரணமாக மரண விசாரணை அதிகாரிகளின் சேவைகளை பெற்றுக்கொள்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

நக்கல, மறவ, செவனகல, கிரிப்பனர, மஹகம, தம்பகல்ல உள்ளிட்ட 25 பிரிவுகளில் மரண விசாரணை அதிகாரி பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

இந்த விடயம் தொடர்பில் மொனராகலை மாவட்ட செயலாளர் பிரகீத் குலதிலகவிடம் வினவியபோது, மாவட்டங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புமாறு நீதி அமைச்சின் செயலாளருக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டுள்ளது என்றார்.



## கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

பெரிய மஸ்கெலியா தோட்ட இளைஞர்கள் ஒன்றிணைந்து, Adams cricket club இன் நிதி பங்களிப்புடன் எடம்ஸ்பீக் த.வி மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்தனர். 80 மாணவர்களுக்கு சுமார் 1,50,000 ரூபாய் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

(செ.தி பெருமாள்)

## மாணிக்கக்கல் சுரங்க குழிக்குள் விழுந்து இளைஞன் மரணம்

ரஞ்சித் ராஜபக்‌ஷ, எம்.கிருஸ்ணா



மடுல்சீமை பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் (லெச்சுமி தோட்ட) மேற்பிரிவு தோட்ட தேயிலை மலையில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு கொண்டிருந்த போது, சுரங்க குழிக்குள் மண்மேடு சரிந்து விழுந்ததில் இளைஞன் ஒருவன் குழிக்குள்ளே உயிர்ழந்துள்ளதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர் .

திங்கட்கிழமை (12) மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், டின்சின் பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய கனகரத்தினம் உபேந்திரன் என்பவர் மரணமடைந்துள்ளார்.

அந்தத் தோட்டத்தின் 2 ஏ தேயிலைமலையில், மூவரடங்கிய குழு, சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டுள்ளது. அதன்போது, மண்மேடு சரிந்து குழிக்குள் விழுந்துள்ளது. அதிலிருந்து இருவர் தப்பிவிட்டனர். மற்றுமொருவர் மண்ணுக்குள் புதையுண்டு மரணித்துள்ளார்.

சம்பவ இடத்துக்கு ஹட்டன் தடயவியல் பொலிஸார் வரவழைக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஹட்டன் நீதிமன்ற நீதவான் தலைமையில் மரண விசாரனைகள் இடம்பெற்று, சட்டவைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக சடலம், பொகவந்தலாவ மாவட்ட வைத்தியசாலையில் இருந்து டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொகவந்தலாவை பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

## கித்துல்கல காட்டிலிருந்து 150 கடிதங்கள் மீட்கப்பட்டன

என்.ஆராச்சி

கித்துல்கல, குருமெட்டிய பிரதேச காட்டுப்பகுதியிலிருந்து 150க்கும் மேற்பட்ட கடிதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் பெரேரா உள்ளிட்ட சிலர், குருமெட்டிய பிரதேசத்தில் நடைபெற்ற மரண சடங்கொன்றில் கலந்துகொண்டு திரும்பிக்கொண்டிருந்த போது, குறித்த கடிதங்களை கண்டதாகவும் அவர்



தெரிவித்துள்ளார்.

அதனை பரிசோதித்த போது அக்கடிதங்கள் 2019, 2020ஆம் ஆண்டுக்குரியவை என்றும் அவை மஹபாகே, மல்வத்த, துனுகேதெனிய உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு உரிய கடிதங்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பின்னர் இந்தக் கடிதங்கள் குறித்து, தான் உடனடியாக தொலைபேசி ஊடாக கேகாலை பிரதேச தபால்மா அதிபருக்கு அறிவித்ததாகவும் தபால் திணைக்களம் ஊடாக இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பதற்காக கேகாலை பிரதேச தபால்மா அதிபருக்கு இந்தக் கடிதங்களை ஒப்படைத்ததாகவும் சுஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

## பட்ஜெட் நிறைவேறியது

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் 15 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மாத்தளை நகர மேயர் எஸ்.பிரகாஷ் பாதீட்டு யோசனையை சபையில் சமர்ப்பித்ததுடன் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் பாதீட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் மாத்திரம் பாதீட்டுக்கு எதிராக வாக்களித்த நிலையில், 15 வாக்குகளால் மாத்தளை மாநகர சபையின் அடுத்தாண்டுக்கான பாதீடு நிறைவேற்றப்பட்டது.

## அராஜக அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்

நிலமேகம் பிரசாந்த்

பதுளை, பூனாகலை தமிழ் மகா வித்தியாலய ஆசிரியர் இமானுவேல் தேவநாயகம் தாக்கப்பட்ட விடயம் மிகவும் கண்டிக்கத்தக்கது.
இவ்வாறான அராஜக அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் தெரிவிக்கையில், ஆசிரியர்கள் என்பவர்கள் அறிவு கண்ணை திறப்பவர்கள். அதே போல சமூகத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்பவர்கள்.
இப்படியிருக்கையில் பாடசாலை வளாகத்தினுள்ளே



சென்று ஆசிரியரை தாக்கும் அநாகரிகமான வேலையை செய்த ஹல்தமுல்ல பிரதேச சபை தவிசாளர் அசோக்குமார் சட்டத்தின் முன் தண்டிக்கப்படவேண்டும்.

எனவே, இவ்வாறானவர்களை, சம்பந்தப்பட்டவர்கள் தலையிட்டு சட்டத்தின் முன் நிறுத்த முன்வர வேண்டுமென மலையக தொழிலாளர் முன்னணி அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்துள்ளார்.

## இளம் தாயின் விபரீத முடிவு

ஆ.ரமேஸ்

வலப்பனை, எலமுள்ள- மாரதுவெல எனும் பிரதேசத்தைச் சேர்ந்த 25 வயது தாயொருவர், தனது மூன்று பிள்ளைகளுக்கும் நஞ்சு ஊட்டி தானும் நஞ்சுண்டு தன்னுயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் திங்கட்கிழமை (12) மாலை இடம்பெற்றுள்ளதாக மத்துரட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

தனது கணவர் தன்னையும் பிள்ளைகளையும் உரிய முறையில், கவனிப்பதில்லை என்றும் உண்பதற்கு உணவு கூட இல்லாத நிலையில், பட்டினியுடன் நாள்களை கடத்தி இறுதியில் உயிரை மாய்த்துக்கொள்ள தயாராகியதாக விசாரணையின் போது, அத் தாய் தெரிவித்துள்ளார். மேலும் 06,05, 01 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் ஓர் ஆண் பிள்ளை ஆகியோரை பொலிஸார் மீட்டு, தமது பாதுகாப்பில் வைத்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் மதுரட்ட பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## போதையில் ஓட்டோ செலுத்திய இராணுவ வீரர் கைது

ஆ.ரமேஸ்

மது போதையில் ஓட்டோவை செலுத்திய இராணுவ வீரர், இராகலை பொலிஸாரால் திங்கட்கிழமை (12) மாலை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் இராகலை, மந்திரித்தென்ன பிரதேசத்தை சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

சந்தேநபர் மதுபோதையில் செலுத்தி வந்த ஓட்டோ, வேகக்கட்டுப்பாட்டை இழந்து, இராகலை தபால் நிலையத்துக்கு அருகில் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது, ஓட்டோவில்



பயணித்த பெண் பலத்த காயங்களுக்கு உள்ளானதுடன், மற்றையவர்கள் சிறு காயங்களுடன் தப்பியுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த இராகலை பொலிஸார், சந்தேகநபரை சோதனையிட்ட போது, அவரும் ஓட்டோவில் பயணித்த விமானப் படை வீரரும் அளவுக்கு அதிகமாக மது அருந்திருந்திருந்தமை தெரியவந்துள்ளது.

இதையடுத்து மது அருந்திவிட்டு வாகனத்தை செலுத்திய குற்றச்சாட்டில் இராணுவ சிப்பாயை இராகலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# முன்கூட்டியே எதிர்வுகூறுவதற்கு பொறிமுறை அவசியம்

வீடுகள், இருப்பிடங்களுக்கு வெளியே செல்வதை கூடுமானவரை தவிர்த்து கொள்ளுமாறும் முகக்கவசங்கள் அணியுமாறும் கடந்தவாரம் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. பலரும் அதை அச்சொட்டாகக் கடைப்பிடித்தனர். இன்னும் சிலர் இருமிக்கொண்டே இருக்கின்றனர்.

வளி மாசு அதிகரித்து இருப்பதன் காரணமாக, இவ்வாறான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது. வானிலையில் மாற்றங்கள் ஏற்படுவதற்கு முன்னர் அதுதொடர்பிலான நிறுவனங்கள் எதிர்வுகூறும். எனினும், வளி மாசடைந்ததன் பின்னரே அந்த அறிவிப்பு விடுக்கப்பட்டமையை அவதானிக்க வேண்டும். வளி மாசடைவதற்கு முன்னர், எதிர்வுகூறல்கள் விடுக்கப்படவில்லை. ஆக, அந்தளவுக்கு வளர்ச்சியடைந்த தொழில்நுட்பம் நாட்டில் இல்லையென்பதே அர்த்தமாகும். நமது நாட்டை பொறுத்தவரையில், இயற்கை அனர்த்தங்களுக்கு பின்னரே, அறிவுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. தொழில்நுட்பம் 20 ஆண்டுகள் பழைமையானதாக இருக்கின்றது.

வளி மாசடைந்தமையால், பிள்ளைகள், முதியவர்கள், சுவாசக் கோளாறு மற்றும் ஒவ்வாமையால் பாதிக்கப்பட்டவர்கள் கடுமையாக சுகவீனமடைந்துள்ளனர். அவர்கள் பேசுவது, அருகில் இருப்பவர்களுக்குகூட விளங்கவில்லை. தூசு, துகள்களால் தொண்டை அடைத்துவிட்டது.

புதுடெல்லியை பொறுத்தவரையில் வளிமாசுக்கு குறைவே இல்லை. கோடைக்காலங்களில் வீதிகளில் நடமாட முடியாது. தூசி, துகள்களால் வளி முழுமையாக மாசடைந்து இருக்கும். உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான காற்று, உயிர்க்கொல்லியாக மாறிவிட்டது.

வளி மாசடைவதால் பல்வேறான நோய்கள் மட்டுமன்றி, அகால மரணங்களும் ஏற்படுகின்றன. வானிலையில் ஏற்படும் மாற்றத்தை அடுத்தே, வளி மாசடைகின்றது என்பதை கவனத்தில் கொண்டு, முன்கூட்டியே எதிர்வுகூறிவிட்டால், சுவாச கோளாறுகளில் சிக்கிக்கொள்வதில் இருந்து தற்காத்துக்கொள்ள முடியும்.

மண்சரிவு, அடைமழை, வெள்ளப்பெருக்கு உள்ளிட்டவை தொடர்பில், அந்தந்த துறைசார் நிறுவனங்கள் எதிர்வுகூறவேண்டும். எனினும், வெள்ளம் வருவதற்கு முன்னர் அணையைக் கட்டுவதற்குப் பதிலாக, வெள்ளம் வந்ததன் பின்னரே, அவசர, அவசரமான வேலைகளை நிறுவனங்கள் முன்னெடுக்கின்றன.

இதேவேளை, தற்போது முன்னெடுக்கப்படும் நிர்மாணங்கள் தொடர்பிலும் பொறுப்பு வாய்ந்த நிறுவனங்கள் ஆகக்கூடுதலான கவனத்தை செலுத்தவேண்டும். இல்லையேல், இன்னும் 30 அல்லது 40 வருடங்களில் பெரும் அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்தே ஆகவேண்டும். அந்தளவுக்கு நிலைமை மோசமானதாக இருக்கின்றது.

இயற்கை அனர்த்தங்கள், வளி மாசடைதல் உள்ளிட்டவை உயிர்கொல்லியாக மாறிக்கொண்டே செல்கின்றன. மனிதன் இயற்கையின் மீது மேற்கொள்ளும் ஆக்கிரமிப்புகள் காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

காடுகளை அழித்து, இயற்கையின் மீது ஆக்குரோஷத்தை காண்பித்து, கட்டாந்தரைகளாக்கிவிட்டு, தூய்மையான காற்றை எதிர்பார்க்கமுடியாது. உயிர்வாழ்வதற்கு மிக முக்கிய காரணிகளில் ஒன்றாக இருக்கும் வளி, உயிர்கொல்லியாக மாறிவிட்டது என்பதை நினைவில் கொண்டு, சுற்றுச்சூழல் மாசடையாமல் இருக்கும் வகையில் முன்னாயத்தங்களை செய்யவேண்டும்.

அத்துடன், இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் முன்கூட்டியே தெளிவுப்படுத்துவதற்கான பொறிமுறையை உருவாக்க வேண்டியதே காலத்தின் தேவையாகும்.






தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# நாட்டுக்கு எத்தனை ஊழல் பேர்வழிகள் வேண்டும்?



எம்.எஸ்.எம் ஐயூப்

உள்ளூராட்சி மன்றத் தேரதல்களுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக் கொள்ளும் நாள்களை டிசெம்பர் இறுதியில் வர்த்தமானி மூலம் அறிவிப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா கூறியுள்ளார்.

அரசாங்கம் இந்தத் தேர்தல்களை ஒத்திப்போட முயல்வதாக, எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டி இருந்த பின்னணியிலேயே, அவர் அறிக்கையொன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

இறுதியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் 2018 பெப்ரவரி 10ஆம் திகதி நடைபெற்றது. நாட்டிலுள்ள 341 உள்ளூராட்சி மன்றங்களில் 340 மன்றங்களுக்கான தேர்தல் அன்று நடைபெற்றது.

இம்மன்றங்களின் நான்கு ஆண்டு பதவிக் காலம், இவ்வருடம் பெப்ரவரி மாதம் முடிவடைந்தது. ஆனால், நாட்டில் நிலவிய அரசியல், பொருளாதார பிரச்சினைகள் காரணமாக, அப்போது இத்தேர்தல் ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. 2023 மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் இத்தேர்தல் நடைபெற வேண்டும்.

ஆயினும், அரசாங்கத்தின் சில நடவடிக்கைகளால் தேர்தல் மீண்டும் ஒத்திப் போடப்படுமோ என்ற சந்தேகம், எதிர்க்கட்சிகளிடையே எழுந்தது. முதலாவதாக, இத்தேர்தல்களை நடத்துவது தொடர்பாக, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டமாஅதிபரின் கருத்தைக் கோரியிருந்தார்.

இதை விமர்சித்த மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, "ஒரு வருடத்துக்கு தேர்தலை ஒத்திவைத்தால், அந்த ஒரு வருடத்துக்குப் பின்னர் தேர்தலை நடத்துவதற்கு சட்டமாஅதிபரின் ஆலோசனையை ஏன் கேட்க வேண்டும்" என்று அண்மையில் பாராளுமன்றத்தில கேள்வி எழுப்பினார்.

அடுத்ததாக, கடந்த ஒக்டோபர் மாதம் ஒன்பதாம் திகதி, ஜனாதிபதி செயலகத்தில் துறைசார் நிபுணர்களுடன் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படுவோரின் எண்ணிக்கையை 8,000 இல் இருந்து 4,000 ஆகக் குறைக்க வேண்டும் என்று கூறியிருந்தார்.

உள்ளூராடசி மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதானது, மிகவும் பொருத்தமானதாகும். குறிப்பாக, தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பின்னணியில், இது மிகவும் அவசியமானதாகும். 2012ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கலப்புத் தேர்தல் முறையில் நடத்துவதற்கான சட்டம் நிறைவேற்றப்படும் முன்னர், இம்மன்றங்களில் சுமார் 4,000 உறுப்பினர்களே இருந்தனர்.

கலப்புத் தேர்தல் முறையின் கீழ், தொகுதி வாரியாகவும் விகிதாசார முறையிலும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். ஆகவே, தொகுதி வாரியாக 4,000 உறுப்பினர்களையும் விகிதாசார முறையில் மேலும் 4,000 உறுப்பினர்களையும் தேர்ந்தெடுக்க அப்போது முடிவு செய்யப்பட்டது.

ஜனாதிபதியின் ஆலோசனையின் பிரகாரம், உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைப்பதாக இருந்தால், முதலில் தொகுதிவாரி உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைக்க வேண்டும். அதற்காக ஒவ்வோர் உள்ளூராட்சி மன்றத்தின் அதிகார எல்லைக்குள்ளும் புதிதாக தொகுதிகளுக்கான எல்லைகளை நிர்ணயிக்க வேண்டும்.

அதற்காக, கடந்த நவம்பர் முதல் வாரத்தில் பிரதமர் தினேஷ் குணவர்தன ஒரு குழுவை நியமித்தார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தவிசாளரும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தற்போதைய தவிசாளருமான மஹிந்த தேசப்பிரிய, அக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். பெப்ரவரி 28ஆம் திகதிக்கு முன்னர், அக்குழு தமது அறிக்கையை பிரதமரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

எனினும், அண்மைக்கால வரலாற்றில் எல்லை நிர்ணய விடயத்தில் இலங்கைக்கு மிகவும் மோசமான அனுபவங்களே கிடைத்துள்ளன. உதாரணமாக, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை கலப்புத் தேர்தல் முறையில் நடத்துவதற்கான சட்டம் 2012ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டாலும், அச்சட்டத்தை அமல் செய்வதற்கான எல்லை நிர்ணயப் பணிகள், 2017 வரை ஐந்தாண்டுகளாக இழுத்தடிக்கப்பட்டன.

இதேபோல், 2017 செப்டெம்பர் மாதம் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் ஒன்பது மாகாண சபைகளுக்குமான தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்காக அரசியலமைப்புத் திருத்தத்தை சமர்ப்பித்தது. அதில் இருந்த சில வாசகங்களால் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் வாய்ப்பு இருப்பதால் அவற்றை நீக்க வேண்டும் என்று உயர்நீதிமனறம் கூறியது. அப்போது அந்தச் சட்டமூலத்தையே தூக்கியெறிந்த அரசாங்கம், மாகாண சபைத் தேர்தலை கலப்பு முறைப்படி நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்தது.

ஆயினும், அதற்காக தனியான சட்டமூலத்தைச் சமர்ப்பிக்காது, மாகாண சபைகள் தொர்டர்பான மற்றொரு சட்டமூலத்தின் திருத்தமாகவே, அரசாங்கம் அதைச் சமர்ப்பித்தது. இதைத் தனியான சட்டமூலமாக சமர்ப்பித்தால், அதுவும் உயர்நீதிமன்றத்துக்குச் செல்லும். அப்போது, அதனாலும் மாகாண சபைத் தேர்தல் ஒத்திப்போடப்படும் என்று நீதிமன்றம் கூறும் என்பதாலேயே அரசாங்கம் அவ்வாறு செய்தது. அந்தத் திருத்தத்தோடு அச்சட்ட மூலம் நிறைவேறியது.

ஆனால், அதன்படி மாகாண சபைத் தேர்தல்களுக்கான எல்லை நிர்ணய குழுவொன்று நியமிக்கப்பட்டு, அதன் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அதை ஐ.தே.க தலைமையிலான அரசாங்கம் நிராகரித்தது.

அந்த அறிக்கை, பிரதமர் ரணில் தலைமையிலான மீளாய்வுக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இரண்டு மாதங்களில், அக்குழு தமது அறிக்கையை சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால், அது கிடப்பில் போடப்பட்டது. எனவே, இன்று வரை மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாமல் இருக்கிறது.

இந்த அனுபவங்களாலேயே அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திப்போட முயல்வதாக விமர்சனங்கள் எழுந்தன. இந்நிலையிலேயே, டிசெம்பர் மாதம் இறுதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான நாள்கள் அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

எனினும், உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் விடயத்தில் திருத்தங்களைக் கொண்டுவர, நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்றை நியமிக்க, அரசாங்கம் அதன் பின்னர் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக, பிரதமர் தினேஷ் குணவர்தனவுடன் கலந்தாலோசித்ததாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ 'சண்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு தெரிவித்துள்ளார். இரண்டு வாரங்களில் தெரிவுக்குழு தமது அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அவர் கூறியிருந்தார். ஆகவே, அரசாங்கம் தேர்தலை ஒத்திப் போடும் என்ற நிலைப்பாட்டில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்தும் இருக்கின்றன.

அதன்படி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த, தேர்தல்கள் ஆணைக்குழுவை பணிக்குமாறு கோரி, திங்கட்கிழமை (12) உயர்நீதிமன்றத்தில் இரண்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. ஐக்கிய மக்கள் சக்தியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவும் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸூம் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ சுமந்திரன், ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த லக்ஷ்மன் கிரிஎல்ல, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி, நாடாளுமன்றத்தில் சுதந்திர எம்.பியாக இருக்கும் அநுர பிரியதர்ஷன யாப்பா ஆகியோர் மற்றைய மனுவை தாக்கல் செய்துள்ளனர். வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கான நாள்களை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதற்கு முன்னர், அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தமது பெரும்பான்மை பலத்தை பாவித்து, பழைய தொகுதி எல்லைகளை இரத்துச் செய்யும் வகையில், தேர்தல் சட்டத்தை திருத்தினால் புதிய எல்லைகள் நிர்ணயிக்கப்படும் வரை, தேர்தல்கள் ஆணைக்குழுவால் வேட்பு மனு கோர முடியாமல் போய்விடும். எனவே, மார்ச் மாதத்தில் தேர்தல் நடைபெறுவது சந்தேகமே!

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, மக்கள் பெரிதும் கஷ்டப்படும் நிலையில், எந்தவொரு தேர்தலையும் நடத்த அரசாங்கம் தயங்குவதை புரிந்து கொள்ளலாம். அதற்காக உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பது என்ற நல்ல நோக்கத்தை பாவித்து, அரசாங்கம் தேர்தலை ஒத்திப் போட முயல்வதாகவும் இருக்கலாம்.

அதேவேளை, உறுப்பினர்களுக்கான அநாவசிய செலவை பொருட்படுத்தாது இந்தப் பொருளாதார நெருக்கடியின் மத்தியிலேயே, தேர்தலை நடத்தச் செய்வதே எதிர்க்கட்சிகளின் நோக்கமாக இருக்கிறது.

மார்ச் மாதத்தில் தேர்தல் நடைபெற்றாலும் இல்லாவிட்டாலும், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர் எண்ணிக்கையை குறைப்பதானது வரவேற்கத்தக்கதாகும். 2018ஆம் ஆண்டு முதல் மாதந்தோறும் அவ்வுறுப்பினர்களின் சம்பளத்துக்காக 135 மில்லியன் ரூபாய் செலவழிக்கப்பட்டது. ஏனைய கொடுப்பனவுகளுக்காக மாதாந்தம் 600 மில்லியன் ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்டது. மொத்தமாக அவர்களது பதவிக் காலமான கடந்த நான்கு வருடங்களில், இந்த இரண்டு கொடுப்பனவுகளுக்காக மட்டும் அரசாங்கம் 3,528 கோடி ரூபாய் செலவிட்டுள்ளது.

மொத்தமாகப் பார்க்கும் போது, இது பெரும் தொகையாக இருந்தாலும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரின் மாதச் சம்பளம் 15,000 ரூபாயாகும். மாநகர மேயரின் சம்பளம் 30,000 ரூபாயாகும். இந்தச் சிறிய சம்பளத்துக்காகவா இவர்கள் தேர்தல் காலங்களில் பல இலட்சம் ரூபாய் செலவிடுகிறார்கள்? மாற்றுக் கட்சிக்காரர்களை கொலை செய்யவும் முற்படுகிறார்கள்?

இல்லை! இந்தப் பதவிகள் ஒருவித புதையல்களாகும். அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தங்கள், பாரிய அளவிலான இலஞ்சங்களுக்கான உத்தியோகப்பற்றற்ற அனுமதிப் பத்திரங்களாகவே இந்தப் பதவிகளை கருத வேண்டும். எனவே, இத்தகைய ஊழல்களுக்காக 4,000 பேருக்கு இடமளிப்பதா அல்லது, 8,000 பேருக்கு இடமளிப்பதா என்ற கேள்விக்கு பதில் தேடுவதற்கு சிரமப்படத்தேவையில்லை.



## வாழ்வியல் தரிசனம்

"உலகின் மகன் நான்; பூமி மாதாவின் பிள்ளை" என்கின்றோம். அப்படியானால், உங்கள் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லுங்கள், நீங்கள் பூமி மாதாவுக்கு என்ன நற்கருமங்களைச் செய்தீர்கள்? உழைப்பது மட்டும் கடமையல்ல!

எல்லோருமே, தங்கள் குடும்ப உறவினர் என்பதால் மட்டுல்ல, வேண்டப்பட்ட உறகளுக்கும் பொதுவாக உதவியிருப்பீர்கள்.

ஆனால், புவியின் வளங்கள் அருகி-நலிந்து வருகின்றன. நதிகளிலும் கழிவுகள் அதிகரித்து வருகின்றன. கடல்நீரை நஞ்சாக மாற்றிவிட்டார்கள். கடல்வாழ் உயிரினங்கள், கடற்கரைகளில் இறந்து கரையொதுங்குகின்றன. எண்ணெய் கசிவுகளால் நடக்கும் அநர்த்தங்களைப் பட்டியலிடமுடியாது. காடுகள் அழிவு, காற்றுமாசு எனப் பலவுண்டு.

மக்கள் தங்கள் வசதிக்காக மட்டும் வாழ்வதோடு, இயற்கையைப் பேணும் நடவடிக்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டும். ஏதோ எமக்குத் தெரியாமலேயே சுற்றுப்புறங்களை அசுத்தமாக்குகின்றோம். மக்கள் நினைத்தால் இந்தத் தவறுகளைச் செய்யாமல் இருக்கலாம். வாழும் உலகைத் தூய்மையாக்குவோம்.

-பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அசமந்தப்போக்கின் அடையாளம்: கெமுனு மாவத்தையில் முறிந்த மரங்கள்



கடந்த வாரம் வானிலை மாற்றம் காரணமாக ஏற்பட்ட பலத்த காற்றால், கந்தளாய் பிரதேச சபைக்கு உட்பட்ட கெமுனு மாவத்தையில் வீதியோர மரம், மின் விநியோக வயர் மேல் விழுந்துள்ளது. உயிராபத்தை விளைவிக்கும் நிலையில் இருக்கும் இந்த மரம், இன்னமும் அகற்றப்படாமல் இருப்பது குறித்து பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கிறார்கள்.

சுமார் ஐந்து வேலை நாள்களுக்கும் மேலாக அகற்றப்படாமல், வீதியின் குறுக்கே, மின்விநியோக கம்பியின் மீது சாய்ந்திருக்கும் இந்த மரத்தின் கீழாலேயே உயிரைக் கையில் பிடித்தவண்ணம் பொதுமக்கள் அச்சத்துடன் பயணம் மேற்கொள்கின்றனர். இவர்களில் பாடசாலை மாணவர்களும் அதிகளவில் செல்கிறார்கள்.

மேலும், இத்தகைய ஆபத்து நிலைமை தொடர்பாக, கந்தளாய் மின்பாவனை அலுவல்கள் காரியாலயத்துக்குத் தெரியப்படுத்தியும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளாமல், அசமந்தமாக இருப்பதாக வீதியைப் பயன்படுத்தும் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகார சபை, மின்சார சபை ஆகியன, தமது பொறுப்பை உணர்ந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

எப். முபாரக்

## இந்திய-சீன எல்லையில்
# மீண்டும் பதற்றம்



இந்தியா - சீனா இடையே கடந்த சில ஆண்டுகளாக எல்லைப் பிரச்சினை தீவிரமடைந்து வருகின்றது.

குறிப்பாக லடாக் எல்லையில் கல்வான் பள்ளத்தாக்கு பகுதியில் 2020ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதி இந்திய - சீன படைகள் இடையே ஏற்பட்ட மோதலில் இந்தியா தரப்பில் 20 வீரர்களும் சீனா தரப்பில் 4 வீரர்களும் உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது. இம்மோதலுக்கு பின்னர் இரு நாடுகளும் எல்லையில் படைகளை குவித்து வைத்துள்ளன.

இந்நிலையில், கடந்த 9 ஆம் திகதி இந்தியா - சீன படைகள் இடையே மீண்டும் மோதல் வெடித்துள்ளது.

சம்பவ தினத்தன்று அருணாச்சல பிரதேசத்தின் தவாங் செக்டார் யங்ட்சி என்ற பகுதியில் இந்திய எல்லைப்பாதுகாப்பு படை வீரர்கள் 50 பேர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர் எனவும் அப்போது, அங்கு ஆணிகள் பொருத்தப்பட்ட இரும்பு கம்பிகள் உட்பட கொடூர ஆயுதங்களைத் தாங்கியவாறு சுமார் 200 சீன வீரர்கள் முன்னோக்கி வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைச் சற்றும் எதிர்பார்க்காத இந்திய வீரர்கள் குறித்த சீன வீரர்களை தடுத்து நிறுத்த முற்பட்டதாகவும், இதன்போது இரு தரப்பினருக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம் மோதலில் இந்திய வீரர்கள் 15 பேர் காயமடைந்த நிலையில் சீன வீரர்கள் அதிக அளவில் காயமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்த மோதலையடுத்து அப்பகுதியில் இந்திய - சீன இராணுவ உயர் அதிகாரிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தைக்கு பின்னர் எல்லைப்பகுதி பழைய மற்றும் சுமூக நிலைக்கு திரும்பியுள்ளது.

மோதலுக்கான காரணம்

மோதல் நடைபெற்ற பகுதியில் சமீபத்தில் இந்திய தரப்பில் இராணுவ படைப்பிரிவு மாற்றப்பட்டுள்ளது. இதன் காரணமாக அப்பகுதியில் நாங்கள் தான் வலிமை மிக்கவர்கள் என்ற மன உறுதி வலிமையை (*morale superiority*) வெளிக்காட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடு சீன படையினர் எல்லைக்குள் முன்னேறி வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



காசிமேடு

## காரில் தொங்கிய மேயர்

'மாண்டஸ்' புயல் காரணமாக ஏற்பட்ட பாதிப்புகளைப் பார்வையிடுவதற்காக அண்மையில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், காசிமேடு துறைமுகத்திற்கு வருகை தந்திருந்தார்.

இதன்போது அவரது கான்வாய் (*convoy*)வாகனத்தில் வருகை தந்த சென்னை மேயர் பிரியா, சென்னை மாநகராட்சி ஆணையர் ககன்தீப் சிங் பேடி, சட்டமன்ற உறுப்பினர் எபினேசர் ஆகியோர், அவ்வாகனத்தில் தொங்கியவாறு பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து இச்சம்பவம் தொடர்பில் அண்மையில் தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜனிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு பதிலளித்த தமிழிசை, "கான்வாயில் ஆணுக்கு நிகராகச் சென்ற பெண் மேயரின் பணியைப் பாராட்ட வேண்டுமே தவிர, விமர்சிக்கக் கூடாது. மேயர் காரில் தொங்கியபடி சென்றது துடிப்பான செயல்" எனத் தெரிவித்துள்ளார்.

புதுடெல்லி

## ரயிலில் துவாயுடன் நடமாடிய நபர்

புதுடெல்லி மெட்ரோ ரயிலில், மஞ்சள் துவாயுடனும் நபர் ஒருவர் நடமாடிய வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.

குறித்த வீடியோவில் வெள்ளை பனியன் அணிந்திருந்த அந்நபர் இடுப்பில் மஞ்சள் துவாய் ஒன்றை கட்டிக்கொண்டு வீட்டில் இருப்பது போன்று சாதாரணமாக நடமாடியுள்ளார்.

இந்நிலையில் குறித்த வீடியோவைத் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ள அந்நபர் "என் வீட்டில் தண்ணீர் காலி, இன்று அலுவலகத்தில் குளிக்கவுள்ளேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேசமயம் இவ் வீடியோவுக்குப் பின்னர் அப்பக்கத்தில் '*behind the scene*' என மற்றொரு வீடியோவையும் பகிர்ந்துள்ளார்.

அதில் அந்த நபர் துவாயைக் கழட்டுவதும் உள்ளே அவர் காற்சட்டை அணிந்திருப்பதும் தெரிகின்றது.

இந்நிலையில் " இவ் வீடியோவை அவர் திட்டமிட்டே லைக்குகளுக்காக



பன்னா

## "மோடியைக் கொல்லத் தயாராகுங்கள்"



"பிரதமர் மோடியைக் கொல்ல தயாராகுங்கள்" எனக் காங்கிரஸ் கட்சியின் துணைத்தலைவராகவுள்ள ராஜா பட்டேரியா தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்த சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

பன்னா மாவட்டத்தில் உள்ள பவாய் நகரத்தில் நேற்று முன்தினம் (12) நடைபெற்ற காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "மோடி தேர்தல்களுக்கு முடிவு கட்டி விடுவார். மோடி மதம், சாதி, மொழியின் பெயரால் பிளவுபடுத்துவார். தலித்துகள், பழங்குடியினர், சிறுபான்மையினர் எதிர்காலம் ஆபத்தில் உள்ளது.

நீங்கள் அரசியல் சாசனத்தை காப்பாற்ற வேண்டும் என்று விரும்பினால், மோடியைக் கொல்வதற்கு தயாராகுங்கள். அவரை வீழ்த்துவதாகக் கருதி கொல்லுங்கள்" எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நாட்டின் பிரதமரை ஒரு மாநிலத்தின் முன்னாள் அமைச்சரே கொல்லுமாறு அழைப்பு விடுத்துள்ளமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் ராஜா பட்டேரியாவுக்கு எதிராக பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

மத்திய பிரதேசம்

## மாறுவேடத்தில் பெண் பொலிஸ்; கல்லூரிக்கு காத்திருந்த அதிர்ச்சி



மத்தியப் பிரதேச மாநிலம், இந்தூரில் உள்ள அரச மருத்துவக் கல்லூரியில் பகிடிவதை நடப்பதாக பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவி எண்ணுக்கு புகாரொன்று அண்மையில் வந்துள்ளது.

எனினும் பகிடிவதையில் ஈடுபடுபவர்கள் யார் என்பது குறித்த தகவல் தெரிவிக்கப்படவில்லை.

இதையடுத்து, பெண் பொலிஸ் அதிகாரியொருவர் மாணவியாக குறித்த கல்லூரிக்குள் நுழைந்து, அங்குள்ள மாணவர்களுடன் நன்றாகப் பேசி பகிடி வதையில் ஈடுபடும் மாணவர்கள் குறித்த தகவலைத் திரட்டியுள்ளார்.

அந்தவகையில் குறித்த கல்லூரியின் மூத்த மருத்துவ மாணவர்கள் 11 பேர், இளநிலை மாணவர்களை மிகவும் கொடுமையான விதத்தில் பகிடிவதை செய்து வந்துள்ளமை தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இச்சம்பவத்துடன் தொடர்புடைய 11 மாணவர்களும் மூன்று வாரங்களுக்கு கல்லூரியில் இருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளனர்.

அதே சமயம் குறித்த பெண் பொலிஸ் அதிகாரியின் செயலானது மக்கள் மத்தியில் வரவேற்பைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அமைச்சரவை
## தீர்மானங்களில் சில...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், இவ்வாரம் கூடிய வாராந்த அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### 'உளவிழிப்புணர்வு'

கல்வி அமைச்சு மற்றும் 'உளவிழிப்புணர்வு பாடசாலை' (*Mindful school*) இன் தாபகர் தம்மஜீவ தேரரின் 'உளவிழிப்புணர்வு மன்றம்' இணைந்து 'உளவிழிப்புணர்வை' உருவாக்கும் நிகழ்ச்சித் திட்டத்தைப் பாடசாலை மாணவர்களுக்கு நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

2023 ஜனவரி மாதம் 04 ஆம் திகதி தொடக்கம் 2023 மார்ச் மாதம் 24 ஆம் திகதி வரை ஒவ்வொரு புதன்கிழமையும் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தை நடத்துவதற்கும், பின்னர் குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை, புதன்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் காலை 7.30 தொடக்கம் 7.40 வரைக்கும் 10 நிமிடங்கள் நடைமுறைப்படுத்துவதற்கும் கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையில் நீர் மற்றும் மலக்கழிவகற்றல் துறையில் தொழில்நுட்ப ஒத்துழைப்புகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள ஒப்பந்த வரைபுக்கு வெளிவிவகார அமைச்சின் உடன்பாடும், சட்டமா அதிபரின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளன. அதற்கமைய உத்தேசிக்கப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக நீர்வழங்கல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### நீதித்துறைச் சட்டம்

வடக்கு மாகாண சபையால் விதிக்கப்பட்டுள்ள நிதிசார் நியதிச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நீதிமன்ற அதிகாரங்களை அமல்படுத்துவதற்காக வடக்கு மாகாண நீதிமன்றங்களுக்கு இயலுமை கிட்டும் வகையில் நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் 2021.07.30 அன்று வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதற்காக 2021.12.13 அன்று இடம்பெற்ற அமைச்சரவை அங்கிகாரத்தை எதிர்ப்பார்த்திருந்த போது, குறித்த நிதிசார் நியதிச்சட்டங்களை அமல்படுத்தும் செயன்முறையை வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களிலும் சமாந்தரமாக அமல்படுத்த வேண்டுமென அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய, கிழக்கு மாகாண சபையால் விதிக்கப்பட்டுள்ள எந்தவொரு வரி மற்றும் தீர்வை விதிப்பதற்கான நிதிசார் நியதிச்சட்டம் தொடர்பாக மேலெழுகின்ற அனைத்து வழக்குகளும், வழக்கு நடவடிக்கைகளும், விடயங்களையும் விசாரணை செய்து நிச்சயிப்பதற்காக கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களையும் பெயர் குறிப்பிட்டு நீதித்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நீதி அமைச்சரால் ஒழுங்குவிதிகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளை பாராளுமன்ற அங்கிகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### ஏற்பாடுகளை வலுப்படுத்தல்

பாலியல் தொல்லைகள், அடிப்படை மனித உரிமை மற்றும் சுதந்திரம் மீறப்படுவதுடன், அதனுடன் தொடர்புடைய ஏற்பாடுகள் தண்டனைச் சட்டக்கோவையின் 345 ஆவது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த குற்றத்திற்காக தண்டனை வழங்குவதற்கு சட்டத்தில் ஏற்பாடுகள் விதிக்கப்பட்டிருப்பினும், இப்பிரச்சினை தொடர்ந்து நிலவுகின்றமை கண்டறிப்பட்டுள்ளது.

அதனால், பாலியல் தொல்லைகள் மற்றும் அனைத்துவித பாலியல் தொந்தரவுகளைக் குற்றச் செயலாகக் கருதுகின்ற உறுப்புரையை தண்டனைச் சட்டக்கோவையில் உட்சேர்ப்பதற்கும், அதற்குக் கடுமையான தண்டனைகளை வழங்குவதற்கும் மற்றும் பாலியல் இலஞ்சத்தை குற்றமாக்குவதற்கும் புதிய உறுப்புரைகளை உட்சேர்த்து தண்டனைச் சட்டக்கோவையைத் திருத்தம் செய்வதற்கு இயலுமாகும் வகையில் சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### அங்கிகாரத்தை பெற்றுக்கொள்ளல்

2009.04.02 தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகள் சமகாலத் தேவைகளுக்குப் பொருத்தமான வகையிலும் மற்றும் சட்ட ஒழுங்குவிதிகளுக்கும் இணங்குகின்ற வகையிலும் மீண்டும் சட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த நடவடிக்கை முறை பற்றிய வரைபு அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் குழுவால் மேலும் ஆராயப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகளை உட்சேர்த்து இறுதி வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தயாரிக்கப்பட்டுள்ள அரச சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகளுக்கு அரசியலமைப்பின் 55(1) உறுப்புரையின் பிரகாரம் கொள்கை ரீதியான அங்கிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கும், குறித்த நடவடிக்கை முறை ஒழுங்குவிதிகளை 2023.01.01 அன்று தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்காகவும் ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### ஊடக வழிகாட்டி நெறிகளை சட்டமாக்கல்

1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 104ஆ(5)(அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல் ஆணைக்குழுவால் 2178/24 மற்றும் 2020.06.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஊடக வழிகாட்டி நெறிகள் வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும் ஊடக வழிகாட்டி நெறிகள் மீறப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்பாடுகள் இதுவரை விதிக்கப்படவில்லை.

குறித்த ஊடக வழிகாட்டி நெறிகள் மீறப்படுவதை தேர்தல் குற்றமாக குறித்துரைக்கப்படும் ஏற்பாடுகள், ஜனாதிபதியை தெரிவு செய்தல் (விசேட ஏற்பாட்டு) சட்டம், பாராளுமன்ற தேர்தல் சட்டம், மாகாண சபை தேர்தல் சட்டம், உள்ளூராட்சி அதிகார சபை வாக்கெடுப்பு கட்டளைச்சட்டம் போன்ற சட்டங்களில் வாக்கெடுப்புக்கு ஏற்புடையதான சட்டங்களின் கீழ் சட்ட விரோத செயலாக கருதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமாகுமாறு குறித்த ஏற்பாடுகளை உள்ளடக்கி சட்டமூலமொன்றைத் தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### தேர்தல்கள் சட்டத்தை திருத்தம் செய்தல்

1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தின் 8(8) உறுப்புரையின் பிரகாரம் தேர்தலொன்றின் போது தேர்தலில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் ஆகியோரால் பின்பற்றப்பட வேண்டிய ஒழுக்கநெறிக் கோவையானது தேர்தல் ஆணைக்குழுவால் 2178/25 மற்றும் 2020.06.03 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த ஒழுக்கநெறி மீறப்படும் சந்தர்ப்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய படிமுறைகள் மற்றும் குறித்த படிமுறைகள் பதவிக்காலம் வரை நடைமுறையிலுள்ளமையைக் குறித்துரைக்கும் ஏற்பாடுகளை உட்சேர்ப்பதற்கும், அடையாளம் காணப்படும் விசேட பதவிகளை வகிக்கின்ற நபர்களுக்கு தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள வாக்கெடுப்பு நிலையத்திற்கு வெளியே விசேட நிலையமொன்றில் தேர்தல் தினத்தில் வாக்களிப்பதற்கு வாய்ப்புகளை வழங்குவதற்கு இயலுமாகுமாறு 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்ற தேர்தல்கள் சட்டத்தைத் திருத்தம் செய்வது பொருத்தமானதென அடையாளம் காணப்பட்டுள்ளது.

அதற்கமைய, அதற்கான ஏற்பாடுகளை உட்சேர்த்து குறித்த சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தென்கொரியா

# ‘சிங்கிள்ஸ்’களின் நாடு



தென்கொரியாவில் திருமணம் செய்யாமல் தனியாக வாழ்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தென்கொரியாவின் 2021 ஆம் ஆண்டு நிலைவரப்படி 5இல் 2 பேர் திருமணம் செய்யாமல் வாழ்ந்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2000 ஆம் ஆண்டில் 15.5 % மக்கள் திருமணம் செய்து கொள்ளாமல் தனியாக இருந்துள்ளனர். தற்போது இவ் எண்ணிக்கை அதிகரிக்கும் நிலையில் 2050ஆம் ஆண்டில் இது 40 சதவீதமாக உயரும் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் வேலை பாதுகாப்பு இல்லாமை , நிதி சுதந்திரம் இது போன்ற காரணங்களால் குழந்தையும் வேண்டாம் திருமணமும் வேண்டாம் என தென்கொரிய இளைய சமுதாயம் செல்வதாக கூறப்படுகின்றது.

மேலும் தரவுகளின்படி தென்கொரியாவில் 12 சதவீத மக்கள் குழந்தை வளர்ப்பை பெரிய சுமையாக கருதுகின்றனர். அதுமட்டுமல்லாது 25 சதவீத மக்கள் “தங்களுக்கு சரியான ஜோடி கிடைக்கவில்லை; ஆகவே திருமணம் செய்து கொள்ளவில்லை” எனக் கூறுகிறார்கள்.

இந்நிலையில் “இப்போதைக்கு எங்களுக்கு கல்யாணமே வேண்டாம்” என தென்கொரியாவில் பலர் கூறினாலும், அது நாட்டின் பிறப்பு விகிதத்தை குறைக்கும் என்பதால் இந்நிலை மாறவேண்டும் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அவுஸ்திரேலியா





## பொலிஸாரை குறிவைத்து தாக்குதல்

**6வர் உயிரிழப்பு**

அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து மாகாணம், விம்பிலா நகரில் கடந்த சில மாதங்களுக்கு முன் காணாமல் போன நபர் ஒரு பண்ணை வீட்டில் இருப்பதாக பொலிஸாருக்கு நேற்று முன்தினம் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து, குறித்த பண்ணை வீட்டுக்குச் சென்ற பொலிஸார் மீது அங்கிருந்த 3 பேர் கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதனை சற்றும் எதிர்பாராத பொலிஸார் பதில் தாக்குதல் நடத்தியதுடன், கூடுதல் பொலிஸாரை அனுப்பும்படி தகவல் கொடுத்தனர்.

இதனைத் தொடர்ந்து அங்கு கூடுதல் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

இந்நிலையில் இரு தரப்பிற்கும் இடையே இடம்பெற்ற தாக்குதலில் 2 பொலிஸார், உட்பட 6 பேர் உயிரிழந்தனர்.

அமெரிக்கா

## ‘ப்ளூ டிக்’ சேவையில் அதிரடி மாற்றம்

பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரை கைப்பற்றியுள்ள டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் ஸ்தாபகர் எலோன் மஸ்க் அண்மைக்காலமாக டுவிட்டரில் பல மாற்றங்களை செய்து வருகின்றார்.

குறிப்பாக டுவிட்டரில் அதிகாரப்பூர்வ கணக்கு எனப்படும் நீல வண்ண டிக் குறியீட்டினைப் (ப்ளூ டிக் ) பயன்படுத்த மாதம் 8 டொலர் வசூலிக்கும் திட்டத்தையும் அமல்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து ஏராளமான கணக்குகள் கட்டணம் செலுத்தி ப்ளூ டிக் குறியீடுகளைப் பெற்றனர். அதே சமயத்தில் ஏராளமான போலிக் கணக்குகளும் கட்டணம் செலுத்தி நீல வண்ண டிக் குறியீட்டினைப் பெற்றுள்ளன.


இந்நிலையில் தவறான நபர்களுக்கு ‘ப்ளூ டிக்’ வழங்குவதை தடுக்கும் விதமாக தொலைபேசி வாயிலாக சரிபார்க்கும் முறையை டுவிட்டர் அறிமுகப்படுத்தியுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தவகையில் ப்ளூ டிக் வழங்கப்பட்டவர்களுக்கு அவர்கள் இணைத்திருக்கும் அலைபேசியின் மூலமாக அழைப்பு மேற்கொள்ளப்பட்டு சரி பார்க்கப்பட்ட பின் ப்ளூ டிக் மீண்டும் உறுதி செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான்

## ஹிஜாப் எதிர்ப்பு போராட்டம்; மீண்டும் ஒரு தூக்குத் தண்டனை






ஈரானில் அண்மையில் ஹிஜாப்பினை முறையாக அணியவில்லை எனக் கூறி கைது செய்யப்பட்ட மஹ்சா அமினி என்ற இளம்பெண் பொலிஸார் தாக்கியதில் உயிரிழந்தார்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்த நிலையில், இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஆயிரக்கணக்கானோர் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்தவகையில் கடந்த 2 மாதங்களாக நடைபெற்ற போராட்டத்தில் போராட்டக்காரர்கள் மீது பாதுகாப்பு படையினர் தாக்கியதில் இதுவரை 400க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

அதே சமயம் போராட்டத்தில் ஈடுபடுவர்களுக்கு ஈரான் அரசு தூக்குத் தண்டனையும் விதித்து வருகின்றது,

அந்தவகையில் ஹிஜாப் எதிர்ப்பு போராட்டத்தில் பாதுகாப்பு படை வீரரை கத்தியால் குத்தியதாக மொஷென் ஷெகாரி என்ற நபருக்கு ஈரான் அரசு அண்மையில் தூக்கு தண்டனை நிறைவேற்றியது.

இந்நிலையில், மஜித்ரிசா ரஹ்நவர்டு என்ற நபருக்கும் நேற்றைய தினம் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

போராட்டத்தின் போது 2 ஈரான் பாதுகாப்பு படை வீரர்களை, மஜித்ரிசா ரஹ்நவர்டு கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்ட நிலையிலேயே அவருக்கு தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரித்தானியா

## ஹரியால் மனம் வருந்தும் வில்லியம்

பிரித்தானியாவின் இளவரசர் ஹரி, அவரின் மனைவி மேகன் இருவருடைய நெட்பிலிக்ஸ் தொடரின் முதல் பாகம் அண்மையில் வெளியானது.

அதில் “கேட் மில்டனை இளவரசர் வில்லியம், காதலிக்கவில்லை. ராஜ குடும்பத்தின் உறுப்பினராக இருப்பதற்காகவே திருமணம் செய்தார்” என்றும் தெரிவித்தார்.

அத்துடன் தன் மனைவி மேகன் பற்றி அவர் கூறுகையில்,“நான் மேகனை சந்திப்பதற்கு சென்ற சமயத்தில் ஊடகங்கள் அவரை விரட்டுவது குறித்து நான் அச்சமடைந்தேன். என்னிடமிருந்து பலரை ஊடகம் விரட்டி விட்டது. என்னோடு என் உலகில் இணைவதற்கு மேகன் பலவற்றை தியாகம் செய்திருக்கிறார். அதன் பிறகு அவரின் உலகத்தில் என்னை இணைத்துக் கொள்ள என்னால் முடிந்த தியாகங்களை செய்தேன்” என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இளவரசர் ஹரி, கேட்மில்டன் குறித்து தெரிவித்த கருத்தால் இளவரசர் வில்லியம் வருத்தமடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டார்


FIFA உலகக் கோப்பை:

## வானவில் ஆடை நபர் மர்மமரணம்

கால்பந்து ரசிகர்களின் அபிமானத்தை வென்ற FIFA 2022 உலகக்கோப்பைத் தொடரானது விறு விறுப்பாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில், அமெரிக்கா - வெல்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியைக் காண அமெரிக்க பத்திரிக்கையாளர் கிராண்ட் வெல்ஹ் (48) அல் ரியான் மைதானத்துக்குச் சென்றார்.

அவர் ‘வானவில் நிற ஆடை’ அணிந்திருந்ததால் அவரைப் பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.‘வானவில் நிறக் குறியீடானது ‘LGBTQ’ எனப்படும்



நான்கு வகையான பாலின உறவு குறித்து ஆதரவு தெரிவிக்கும் வகையில் பயன்படுத்தப்படுகின்றது.

இதனால், மைதானத்துக்குள் நுழைய வேண்டுமானால் வானவில் நிற ஆடையை கழற்றிவிட்டு வேறு உடை அணிய வேண்டும் என கூறியுள்ளனர்.

இதனையடுத்து ஆடையை மாற்றிய பின் கிராண்டை பொலிஸார் மைதானத்துக்குள் அனுமதித்துள்ளனர்.

இந்நிலையில், அண்மையில் அர்ஜெண்டினா - நெதர்லாந்து இடையேயான கால்பந்துப் போட்டியைக் காணச் சென்ற கிராண்ட் வெல்ஹ், போட்டியை கண்டுகளித்து கொண்டிருந்தபோது திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

அவரது மரணத்திற்கான காரணம் குறித்து இதுவரை எந்த தகவலும் வெளியாகவில்லை.

உலகக் கிண்ணம்:

# நடப்புச் சம்பியன்களை தாண்டுமா மொரோக்கோ?



கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டியில் மொரோக்கோவை நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ் எதிர்கொள்கிறது.

இப்போட்டியில் பெரும்பாலும் பிரான்ஸே வெல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றபோதும் இத்தொடரில் பெல்ஜியம், ஸ்பெய்ன், போர்த்துக்கல்லை வீழ்த்திய மொரோக்கோவானது பிரான்ஸுக்கு அதிர்ச்சியளித்தாலும் ஆச்சரியப்படுவதுக்கில்லை.

தடுப்பரண் போல தம்மைக் கட்டமைத்துள்ள மொரோக்கோவானது இத்தொடரில் எதிரி அணிகள் எக்கோலையும் பெற அனுமதிக்கவில்லை என்ற நிலையில், கோல்களைப் பெறுவதற்கு பிரான்ஸின் நட்சத்திர முன்களவீரர்களான கிலியான் மப்பே, ஒலிவியர் ஜிரூட் ஆகியோர் சவால்களை எதிர்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, ஹக்கின் ஸியெச், அஷ்ரஃப் ஹக்கிமி மூலமாக அதிரடியாக முன்னேறிச் சென்று மொரோக்கோ தாக்குதல் நடத்தும் என்ற நிலையில், ரஃபேல் வரான், தியோ ஹெர்ணாண்டஸ், ஜுலெஸ் கூன்டேயிடமிருந்து உச்சக்கட்ட அர்ப்பணிப்பு எதிர்பார்க்கப்படுகிறது.

மொரோக்கோ இப்போட்டியில் வெல்லுமிடத்து முதலாவது ஆபிரிக்க அணியாக இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுமென்பதோடு, மறுபக்கமாக பிரான்ஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறும் சந்தர்ப்பத்தில் பிரேஸிலுக்கு அடுத்ததாக அடுத்தடுத்த உலகக் கிண்ண இறுதிப் போட்டிக்கு முன்னேறிய அணியாக தமது பெயரை பதிந்து கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.




## ஆர்சனல் செல்லும் ஜோவா பீலிக்ஸ்?

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டின் முன்களவீ ரரான ஜோவா பீலிக்ஸைக் கைச்சாத்திடுவதில் இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான ஆர்சனல் முன்னிலையில் உள்ளதாகக் கூறப்படுகிறது.

23 வயதான பீலிக்ஸைக் கைச்சாதிட பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன், வேறு பிறீமியர் லீக் கழகங்களான மன்செஸ்டர் யுனைட்டெட், அஸ்டன் வில்லா ஆகியனவும் முயல்கிறமை குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கல் கழகமான பெய் பிக்காவிலிருந்து கடந்த 2019ஆம் ஆண்டு, ஏழாண்டுகள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட பீலிக்ஸ், முகாமையாளர் சிமியோனின் கீழ் தடுமாறுகிறமை குறிப்பிடத்தக்கது.

எல்.பி.எல்:

## கொழும்பு ஸ்டார்ஸை வென்ற ஜ.:ப்னா கிங்ஸ்

லங்கா பிறீமியர் லீக்கில் (எல்.பி.எல்), பல்லேகலவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொழும்பு ஸ்டார்ஸுடனான போட்டியில் நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: கொழும்பு ஸ்டார்ஸ்

ஜஃப்னா கிங்ஸ்: 178/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷொய்ப் மலிக் ஆ.இ 35 (26), சதீர சமரவிக்கிரம 32 (25), அவிஷ்க பெர்ணாண்டோ 32 (31), திஸர பெரேரா 29 (13), அஷான் ரந்திக 27 (14), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 17 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: நவீன்-உல்-ஹக் 1/28 [4], சீக்குகே பிரசன்னா 0/24 [4], நவோத் பரணவிதான 0/13 [2])

கொழும்பு ஸ்டார்ஸ்: 172/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அஞ்சலோ மத்தியூஸ் ஆ.இ 73 (38), பெனி ஹொவெல் 43 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: விஜயகாந்த் வியாஸ்காந்த் 2/32 [4], ஜேம்ஸ் புல்லர் 2/32 [4], அசித பெர்ணாண்டோ 1/31 [4], மகேஷ் தீக்‌ஷன 1/32 [4])

போட்டியின் நாயகன்: ஜேம்ஸ் புல்லர்



இதேவேளை இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கண்டி பல்கொன்ஸை கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், பிற்பகல் 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் தம்புள்ள ஓறாவை ஸ்டார்ஸ் எதிர்கொள்கிறது.

இன்று ஆரம்பிக்கிறது டெஸ்ட் தொடர்:

## இந்தியாவை வீழ்த்துமா பங்களாதேஷ்?

பங்களாதேஷ், இந்திய அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது, சட்டோகிராமில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கிறது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறுவதற்கான போட்டியில் இந்தியாவும் களத்திலிருக்கின்ற நிலையில், இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறும் தமது வாய்ப்புகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு இரண்டு போட்டிகளிலும் இந்தியா வென்றாக வேண்டியுள்ளது.




காயம் காரணமாக இப்போட்டியில் அணித்தலைவர் றோஹித் ஷர்மா இல்லாத நிலையில், அவரை அணித்தலைவராக லோகேஷ் ராகுல் பிரதியிடுவதோடு, அணியில் ஷுப்மன் கில் இடம்பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, இரவிச்சந்திரன் அஷ்வினோடு, அக்ஸர் பட்டேல், குல்டீப் யாதவ் ஆகியோர் சுழற்பந்துவீச்சாளர்களாகக் களமிறங்குவதோடு, மொஹமட் சிராஜ், உமேஷ் யாதவ் ஆகியோர் வேகப்பந்துவீச்சாளர்களாகக் களமிறங்குவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், பங்களாதேஷ் பக்கம் காயம் காரணமாக இப்போட்டியில் தஸ்கின் அஹ்மட் இல்லாதபோதும் எபொடொட் ஹொஸைன், ஷொரிஃபுல் இஸ்லாம் ஆகியோர் அவரது இடத்தை நிரப்புவார்கள் என்ற நிலையில், அனாமுல் ஹக், மஹ்முடுல் ஹஸன் ஜோய், மொமினுல் ஹ்க்கை உள்ளடக்கிய முன்வரிசைத் துடுப்பாட்டமே பிரச்சினைக்குரியதாகக் காணப்படுகின்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 14 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.